# ஈழநாடு

Eelanadu

වීළනාඩු

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 01.04.2021 வியாழக்கிழமை | இதழ் : 122 | பக்கங்கள் : 16









07

இரத்தப் பரிசோதனை மூலமே தொற்றாளரை இனங்காணலாம்



09

வரப்போகும் மாகாண சபை கடினமானதா கவே இருக்கும்



11

கைதிகள் விடுதலை அறிக்கையில் அரசியல் கைதிகள் இல்லை!



13

மேற்கிந்தியத்தீவு அபாரம்! சவால் விடுக்கும் இலங்கை!!

# ஜெனிவாவை எதிர்கொள்ள எதிரணியுடன் அரசு கூட்டு!



## சகல கட்சிகளுடனும் பேசத் தீர்மானம்

கொழும்பு, ஏப்ரல் 01

ஜெனிவா தீர்மானத்தை எதிர்கொள்வதற்காக அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு அரசு தீர் மானித்துள்ளது.

இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு அரசு தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15



## யாழ். வலய பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை பூட்டு

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாட்களில் ஏற்பட்ட கொரோனா தொற்று பரம்பல் அதிகரிப்பை அடுத்து மூடப்பட்ட யாழ். வலயப் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரும் வரை தொடர்ந்தும் மூடப்பட்டிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய

15

## கொரோனா தொற்றால் மேலும் இருவர் மரணம்

கொழும்பு,ஏப்.01

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் இருவர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் உறுதிப்படுத் தினார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 568 ஆக அதிகரித்துள்ளது.

(அ-எ)

## மனித உரிமை பேரவையின் தீர்மானம் நீதியை நிலைநிறுத்தத் தவறிவிட்டது!


### விக்னேஸ்வரன் எம்.பி. பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 01

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் பேர வையின் தீர்மானம் நீதியை நிலைநிறுத்தத் தவறிவிட்டது என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதி லளித்த அவர், ”இலங்கையில் நீதி மற்றும் மனித உரிமைகளை உறுதி செய்வதற்கான தெளிவான நடவடிக்கைகளை பரிந்துரைக்க தீர்மானம் தவறி

15



## சிறைக்குள் ரஞ்சனுக்கு சித்திரவதையா?

கொழும்பு, ஏப். 01

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ் சன் ராமநாயக்க, சிறைச்சாலைக் குள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திலிப் வெதஆராச்சி நேற்று காலை ரஞ்சன் எம்.பி சிறை வைக்கப்பட்டுள்ள அங்குனகொலபெலஸ்ஸ

15

## “துணிவு இருந்தால் ஜனாதிபதி மாகாணத் தேர்தலை நடத்தட்டும்”

### சவால் விடுக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப்ரல் 01

”ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கும் அவர் தலைமையிலான அரசுக் கும் துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்திக் காட் டட்டும்.”

- இவ்வாறு சவால் விடுத்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்ற நாட் களில், இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் விரைவில் நடை



பெறவுள்ளது என ஜனாதிபதி தலைமை யிலான அரச தரப்பினர் கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர். ஆனால், கூட்டத் தொடர் நிறைவடைந்த பின்னர் - இலங்கை மீது புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர்

15

## யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேருக்கு கோரோனா!

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ்ப்பாணத்தில் மேலும் 25 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.

அவர்களில் ஒருவர் மருதனார்

15

## ரஞ்சனுக்கு நீதி வழங்கும் திட்டம் ஆளுங்கட்சிக்குள் முன்வைப்பேன்

### அமைச்சர் மஹிந்தானந்த கூறுகிறார்

கொழும்பு, ஏப். 01

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி வழங்க, ஆளுங்கட்சிக்குள் தனிப்பட்ட ரீதியில் முன்மொழிவொன்றை சமர்ப் பிக்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க மீது நுகே கொடை நீதிவான் நீதிமன்றத்தில்

15

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாவை...

ஜெனிவா தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர்கள் இருவர் அரசின் இந்த நிலைப்பாட்டை வெளிப் படுத்தியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர் மானம் ஒரு தேசிய விவகாரம் என்றும் இதனைக் கையாள்வதற்கு அரசியல் நோக்கங்களைக் கவிட்டு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார். இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந் தவும் நேற்று இதே கருத்தை வலியுறுத்தி யுள்ளார்.

ஜெனிவா விவகாரத்துக்கு உரிய தீர்வுகாண அரசாங்கமும், எதிர்க்கட்சி யும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும். இவ்விடயம் குறித்து அனைத்து அரசி யல் கட்சிகளுடன் பேச்சு முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை குறித்து 2009 ஆம் ஆண்டு தொடக்கம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் அனைத்தும் மீள்பரிசீலனை செய்யப் படும் என தொலைநோக்கு கல்வி அபி விருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று தெரிவித்தார்.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 பிரேரணை இலங்கையின் இறையாண் மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை யிலான அரசாங்கம் தொடர்பில் பல போலியான குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளமை இலங்கை மக்களின் ஆணைக்கு முரணானது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கான இராஜதந்திரிகள் தொடர்பில் தற்போது மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப் படுகின்றன. இவ்விடயம் குறித்து வெளி விவகார அமைச்சு உரிய கவனம் செலுத் தும். இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இரு வேறுபட்ட கொள்கைகளை கடைப் பிடிக்கின்றமை ஐக்கிய நாடுகள் சபை யின் தோற்றக் கொள்கைக்கு முரணாக அமைந்துள்ளது.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுடன் ஜெனிவா விவகாரம் தொடர்பில் பேச்சு வார்த்தையை முன்னெடுக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் அரசாங்கம், எதிர்க் கட்சி ஒன்றிணைந்து செயல்பட வேண் டும். ஜெனிவா விவகாரத்தை எதிர்க்கட்சி யினர் குறுகிய அரசியல் நோக்கத்துக் காகப் பயன்படுத்திக் கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து விசேட பொறிமுறையை வகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை விவகாரம் தொடர்பில் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து சமர்ப் பிக்கப்பட்டுள்ள சாதக மற்றும் பாதக மான அறிக்கைகள் அனைத்தும் மீள்பரி சீலனை செய்யப்படும். உள்ளக விவகா ரங்களில் தலையிட சர்வதேச நிபுணர் குழுவுக்கு ஒருபோதும் அனுமதி கிடை யாது- என்றார். (அ-எ)

## துணிவு இருந்தால்...

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அமைச்சர்கள் வெவ்வேறு கருத்துக் களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வருடம் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என ஓர் அமைச்சரும், கலப்பு முறைமையில் விரைவில் தேர் தலை நடத்த அரசு உத்தேசித்துள்ளது என இன்னோர் அமைச்சரும், புதிய அரசமைப்பு வந்த பின்னரே தேர்தல் நடக்கும் என மற்றுமோர் அமைச்சரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. தீர்மானத்துக்கு அஞ்சியே மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் விரைவில் நடைபெறும் என்று அரசு கூறியிருந்தது. ஆனால், தீர்மானம் நிறைவேறிய பின்னர் அரசின் உண்மை முகம் வெளிப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தற்போது நடைபெற்றால் அரசு படுதோல்வியடை யும் என்பது ஜனாதிபதிக்குத் தெரிந்த விடயம். அதனால்தான் தேர்தலை நடத்துவதில் அரசு இழுத்தடிப்புச் செய்கின்றது.

ஜனாதிபதிக்கும் அவர் தலைமையி லான அரசுக்கும் துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்திக் காட்டட்டும்" - என்றார்.

## மனித உரிமை...

யமை ஏமாற்றமளிக்கிறது.

இந்நிலையில், மனித உரிமைகள் பேர வையுடன் ஒத்துழைப்பதற்கான முந் தைய உறுதிப்பாட்டிலிருந்து இலங்கை வாபஸ் பெற்றிருந்தாலும், இலங்கை திருந்தவதற்கு சர்வதேச சமூகம் இன் னொரு வாய்ப்பையும் இன்னும் அதிக நேரத்தையும் வழங்கியுள்ளது.

"எதிர்கால யுத்தக் குற்றங்களுக்கான விசாரணைகளை சேகரிக்கவும், பாது காக்கவும், பகுப்பாய்வு செய்யவும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத் திற்கு இந்தத் தீர்மானம் உத்தரவிட்டுள் ளது. இதை வரவேற்க வேண்டும். ஆனால் இது எவ்வாறு வெளிப்படும் என்பதைப் பார்க்க வேண்டும்.

"எனது கவலை என்னவென்றால், இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டு அவகாசத்தில், அரசாங்கம் எங் கள் மக்களுக்கு எதிராக கடுமையான மனித உரிமை மீறல்களைச் செய்யும்.

ஜெனீவாவில் இந்தியா வாக்களித்த அதே நாளில், இலங்கை கடற்படை 52 இந்திய மீனவர்களை கைது செய்தது. இது இலங்கையின் பதிலடி. குறிப்பாக எங்கள் நிலங்கள் சூறையாடப்படும் என்று நான் கவலைப்படுகிறேன். தற்போது புலம் பெயர் அமைப்புக்களும் தனி நபர்களும் தடை செய்யப்பட்ட பட்டியலில் இணைக் கப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக அத்தகைய அமைப்புகளில் உள்ளவர் களுடனோ அல்லது பெயரிடப்பட்ட நபர்களுடனோ தொடர்பு அல்லது தொடர்பு இருப்பதாகக் கூறப்படுபவர் களைத் துன்புறுத்துவார்கள்.

"இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக் களுக்கு மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் பொறுப்பாகும் என்று நான் சொல்லவேண்டியதில்லை. எங்கள் மக்களின் பாதுகாப்பிற்கு அவர்கள் பொறுப்பு. அவர்கள் விழிப்புணர்வைக் காட்டாவிட்டால், முன்னாள் இராணுவ அதிகாரியின் கீழ் உள்ள இலங்கை அர சாங்கத்தை உங்களால் கட்டுப்படுத்த முடியாது-என்றார். (அ)

## ரஞ்சனுக்கு...

தாக்கல் செய்த அவதூறு வழக்கையும் நேற்று அவர் வாபஸ் பெற்றார்.

2016 ஊடக சந்திப்பொன்றில் தன் மீது அவதூறு தெரிவித்தார் என ரஞ்சன் மீது இந்த வழக்கை மஹிந்தானந்த தொடர்ந் திருந்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவை மற்றவர்கள் தவறாக வழிநடத்தினர் என மஹிந் தானந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர் ஒரு அப்பாவி நபர், அவர் தவறாக வழிநடத்தப்பட்டு மற்றவர் களால் பயன்படுத்தப்பட்டார்.

அவரை தவறாக வழிநடத்தியதால், இன்று சிறையில் அடைக்கப்பட்டுள் ளார். அவரை பிரதிநிதித்துவப்படுத்த யாரும் இல்லாததால் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கை வாபஸ் பெற முடிவு செய்தேன்.

நல்லாட்சி காலத்தில் என்னை மிகவும் தாக்கிய ரஞ்சனுக்கு மன்னிப்பு வழங்கி, அவரில் பழிவாங்கல் தொட ராமல் விடுவதன் மூலம் நாட்டுக்கு ஒரு முன்மாதிரியை வழங்கியுள்ளேன். யாரை யும் பழிவாங்க விரும்பவில்லை-என்றார்.

# விலைவாசி அதிகரிப்புக்கு எதிராகப் போராட்டம்!



கொழும்பு, ஏப். 01

விலைவாசி அதிகரிப்புக்கு எதிராக கொழும்பில் நேற்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருதானை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பி னர்களான மனோ கணேசன், முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப் பினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், "அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் இம்முறை தமிழ், சிங்கள புத்தாண்டை பலகாரங்களுடன் கொண்டாட முடி யாத நிலைமை ஏற்பட்டுள்ளது" - என்று கூறினார்.

# வர்த்தக நிலையத்தில் கைகலப்பு இரண்டு பேர் படுகாயமடைந்தனர்

வவுனியா, ஏப். 01

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இளைஞர் குழு ஒன்று வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து கைகலப்பில் ஈடுபட்டதில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இச் சம்ப வம் தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது: -

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதி யில் உள்ள மதுபானச்சாலையில் மது அருந்தி விட்டு வந்த இளைஞர் குழு ஒன்று மதுபானச்சாலைக்கு முன்பாக இருந்த வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து அதன் உரிமையாளர் மீது தாக்குதல் நடத்திய துடன், அருகில் இருந்த வர்த்தக நிலையங் களில் நின்றோர் மற்றும் வீதியில் நின்றோரையும் அச்சுறுத்தியுள்ளது.

இதன்போது அப்பகுதியில் ஏற்பட்ட அடிதடி மற்றும் கைகலப்பில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில்...

மடம் சந்தை வியாபாரி என்று அவர் குறிப் பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்ப்பாணம் மருத்துவ பீட ஆய்வு கூடம் இரண்டிலும் 756 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டன.

25 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 321 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 8 பேருக்கு தொற்று உள் ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் திருநெல்வேலி பொதுச் சந்தை தொகுதியைச் சேர்ந்தவர்கள். ஏனைய 3 பேரும் ஏற்கனவே தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத் தப்பட்டவர்கள்

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரி. ஏனைய ஒருவர் தொற் றாளருடன் நேரடித் தொடர்புடையவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 5 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறி யப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப் பட்டவர்கள். மேலும் இருவர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்தவர் கள்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## யாழ். வலய...

லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வைத்தியர் ஆ.கேதீஸ் வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

நாங்கள் அதிகமான நபர்களிடம் பி.சி.ஆர் மாதிரிகளை எடுத்ததற்கு காரணம் கொரோனாவின் பரம்பல் தீவிரம் எவ் வாறு இருக்கின்றது என்பதை கண்டறி வதற்காகவே.

இதன் மூலம் கிடைக்கப்பெற்ற முடிவு களின் பிரகாரம் இதனை கட்டுப்படுத் தப்படக்கூடிய சூழ்நிலை காணப்படு கின்றது. எனவே மக்கள் தேவையற்ற அச்சத்தை தவிர்த்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்ளுகின்றோம்-என்றார்.

## சிறைக்குள்...

சிறைக்கு அவரைச் சந்திக்கச் சென்றார்.

எனினும் அவரை உள்ளே அனுமதிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இந்த நிலைமை குறித்து ஊடகங் களுக்கு கருத்து வெளியிட்ட அவர், பாராளுமன்ற சிறப்புரிமையை சிறைச் சாலை ஆணையாளர் மீறியிருக்கிறார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் முழங்காலில் இரண்டு சத்திர சிகிச்சை செய்திருப்ப தால் மலசலகூடம் செல்ல கதிரை வடி விலான ஆசனமே தேவைப்படுகிறது. ஆனால் சிறை அதிகாரிகள் அதனை வழங்க மறுத்துள்ளனர்-என்றார்.

## தமிழ் அரசியல்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமோசனத்தை தருமென்று எதிர்பார்க்க கூடியதாக இருக்கின்ற அதேசமயம், யுத் தக் குற்றங்களென்று கண்டறியப்பட்ட வற்றுக்கும் நீதியை பெற்றுக்கொடுக்கு மென்ற நம்பிக்கையும் நிலவுவதாகவே இருக்கின்றது.

அரசியல் ரீதியாக ஜெனிவா பிரே ரணையை நோக்கும்போது அதில் குறிப் பிடப்பட்டுள்ள மாகாணசபை தேர்தல் களும் முக்கியத்துவம்பெறுகின்றன. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன்மூலம் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் வடக்கு-கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் இருப்பைக்கூட உறுதிசெய்யமுடியு மென்றே கருதலாம்.

இதுவிடயத்தில் வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பு எவ்வளவுதூரம் ஆக்கபூர்வமாக தனது நகர்வுகளை மேற் கொள்ளுமென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

அண்மையில் தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் பி.பி.சி. தமிழ் ஒரு ஆய்வை நடத்தியிருந்தது.

இராமேஸ்வரத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுடன் கூடவே சென்று களஆய்வை நடத்தியிருந்தது பி.பி.சி.

தமிழக மீனவர்கள் எல்லையைத் தாண்டி வரும்போது சிறிலங்கா கடற்படையினர் தாக்குகிறார்கள் என்பதும் சுட்டுவிடுவார்கள் என்று அவர்கள் பயப்படுவதும் நியாயமானதுதான். எல்லை எது என்று தெரியாமல் மீனவர்கள் இலங்கைக் கடல்பரப்பிற்குள் வந்துவிட்டால் சிறிலங்கா கடற்படையினர் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது மட்டுமல்ல, தாங்கள் இந்தியக் கடல்பகுதிக்குள் நின்றாலும் சிறிலங்கா கடற்படையினர் வந்து எங்களை மிரட்டுகிறார்கள் என்றும் அந்த ஆய்வில் பல மீனவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

பல ஆண்டுகளாக இந்த விவகாரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கடலில் எல்லையை எப்படி வரையறுப்பது என்று ஒரு பக்கம் வாதம் நடந்தாலும், சிலர் தெரிந்தே இலங்கை கடல் பக்கம் சென்று மீன் பிடிக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

எல்லை எது என்று தெரியாமல் இலங்கைக் கடற்பரப்பிற்குள் வந்து மீன்பிடிப்பதை தடுப்பது இருக்க, அவர்கள் இந்திய எல்லைக்குள் நின்று மீன்பிடித்தாலும் அங்கு சிறிலங்கா கடற்படை வருகின்றது என்பது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. எது எல்லை என்பது மீனவர்களுக்கு தெரியாது என்பதில் நியாயம் இருக்கலாம். ஆனால், சிறிலங்கா கடற்படையினருக்கு தெரியாமல் இருக்க முடியாது. அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால் அதனைத் தடுக்கவேண்டியது இந்தியக் கடற்படையினர் அல்லது கரையோரக் காவல்படையின் பணி.

இப்போது அதுவல்ல இங்கே கவனிக்கப்பட வேண்டியது.

இராமேஸ்வரம் மீனவர் சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் ஆச்சரியத்துக்குரியவை.

அவர் சொல்கிறார்:

'இராமேஸ்வரத்தில் இருந்து ஒரு சில கிலோ மீற்றர் தூரத்திலேயே இலங்கை கடல் பகுதி வந்துவிடும். மொத்தம் பன்னிரண்டு கடல் மைல் வரைதான் இந்திய எல்லை. இந்திய பகுதியில் மீன் வளங்கள் மிகவும் குறைவு. கச்சதீவு மற்றும் இலங்கை பகுதியில்தான் அதிக மீன்கள் கிடைக்கும். இங்கு மீன் இல்லை என்றால் மீனவர்கள் என்ன செய்வார்கள்' என்று கேள்வி எழுப்புகிறார் ஜேசுராஜா என்ற அந்த மீனவர் சங்க பிரதிநிதி.

இந்தியப் பகுதிகளில் மீன்வளங்கள் குறைவு என்று அவர் சொல்வது ஏன்? இது எப்படி நடந்தது? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது என்பது ஒன்றும் சிக்கலானது அல்ல. அங்கே அவர்கள் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி மீன்களை மாத்திரமல்ல, மீன்வளங்களையும் அள்ளி எடுத்துவிட்டனர். மீன்கள் என்பது கடலில் கொண்டு வந்து கொட்டப்படுவது அல்ல. அது உயிரினம், பல்கிப் பெருகி தனது இனத்தை பெருக்கம் செய்யவேண்டும். அதற்கு வளங்கள் தேவை. தமிழக இழுவைப்படகுகள் மீன்களை கடலோடு அள்ளி எடுக்கின்றபோது கூடவே கடல்வளங்களையும் அள்ளிக்கொண்டு போய்விட்டார்கள்.

இப்போது அவர்களுக்குத் தேவை இலங்கை கடலில் உள்ள மீன்கள். அவர்கள் அதே பாணியில் இலங்கைக் கடலிலும் மீன்பிடியில் ஈடுபட்டால் இங்குள்ள வளங்களையும் சேர்த்தே அள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். விரைவிலேயே இலங்கைக்கடலும் தமிழக கடல்போல மலடாகிவிடும்.!

இதனால்தான் நமது மீனவர்கள் இந்திய மீனவர்களை அனுமதிக்கக்கூடாது என்று வாதிட்டு வருகின்றனர்.

தெற்கிலிருந்து வடக்கிற்கு வந்து சிங்கள மீனவர்கள் வாடி அமைத்து மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களின் வாடிகளைக் கொளுத்துகின்ற நாம், அதற்கு எதிராக பொங்கி எழுகின்ற நமது அரசியல் தலைவர்கள், தமிழக மீனவர்களின் இந்த அத்துமீறலுக்கு எதிராக வாய்திறப்பதில்லை.

இது நமது தயாகம், இங்கே தெற்கிலிருந்து யாரும் வரமுடியாது என்றால், நமது தாயகக் கடலில் தமிழக மீனவர்கள் வந்து அத்துமீறி மீன்பிடிப்பதை மாத்திரம் வாய்பொத்தி அனுமதிப்பது ஏன் என்பது தெரியவில்லை.

நமது கடற்கரையோரங்களில் மணல் இல்லாமல்போய்விட்டதே, தமிழக கரையோரங்களிலுள்ள மணல்களை போய் எடுத்துவருவோமா?

**- ஊர்க்குருவி.**

*நாள் சம்பளம் ஆயிரம் ரூபா:*

# வர்த்தமானி மீதான தீர்ப்பு 5ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப்.01

**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரித்து அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி, பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் தாக்கல் செய்த மனுவுக்கு அமைய இடைக்கால தடையுத்தரவை விதிப்பதா, இல்லையா என்பது தொடர்பிலான உத்தரவை எதிர்வரும் 05 ஆம் திகதி அறிவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.**

மேலும், பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பிப்பது தொடர்பிலான உத்தரவும் அன்றைய தினத்தில் அறிவிக்கப்படவுள்ளது.20 பெருந்தோட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்னே கொரயா ஆகியோர் முன்னிலையில் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சில வருடங்களுக்கு முன்னர் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கையை ஆராய்ந்த அரசாங்கம், அவர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளதால், மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்து, அந்த மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்யுமாறு சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி சுசந்த பாலபட்டபெந்திகே கோரிக்கை விடுத்தார். (ஐ)



## தந்தை செல்வா ஜனனதினம் யாழில் கொண்டாடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 01

இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் (தந்தை செல்வா) 123வது ஜனன தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று கொண்டாடப்பட்டது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து, பின்னர் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தின் தலைவரும் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயருமான அ. ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ் மாநகர சபை உறுப்பினர் இ. ஆனல்ட் மற்றும் தமிழ் அரசு கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ-3)

## லஞ்சம் வாங்கிய கிராம சேவகர் கைது!

வவுனியா, ஏப். 01

லஞ்சம் பெற்ற கிராம சேவகர் ஒருவர் லஞ்சம், ஊழல் ஒழிப்பு பிரிவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

வவுனியா கோவில்குளம் பிரிவு கிராமசேவகரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவர், நபர் ஒருவரிடம் லஞ்சம் பெற்றார் என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்தே கிராம சேவகர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

## 3 மாதத்தில் 18 பொலிஸார் விபத்துக்களில் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 01

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் பதிவான வீதி விபத்துக்களில் 72 பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், 18 பொலிஸார் உயிரழந்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2020ம் ஆண்டில் வீதி விபத்துக்களில் 293 பொலிஸார் காயமடைந்ததாகவும், அவர்களில் 28 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:*

## அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் திங்கள் கையளிப்பு

கொழும்பு, ஏப். 01

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை உப குழுவின் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக குழுவின் செயலாளர், ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் நாயகம், சட்டத்தரணி ஹரிகுப்தா ரோஹனதீர குறிப்பிட்டார்.

அமைச்சரவை உப குழுவின் அறிக்கையை ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற கண்காணிப்பு தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பிலும் அமைச்சரவை உப குழு ஆராய்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)




**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 01.04.2021 வியாழக்கிழமை ஈழநாடு
சார்வரி, பங்குனி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## தந்தை செல்வநாயகத்தின் வயது 123

தந்தை செல்வநாயகம் என்று தமிழரசு கட்சியினரால் மட்டு மல்லாது, ஏனைய தமிழ் கட்சியினராலும் அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 123ஆவது ஜனன தினத்தை தமிழசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, மட்டக்களப்பில் நினைவுகூர்ந்திருக்கின்றார். 1949இல் தமிழரசு கட்சியை ஸ்தாபித்த எஸ். ஜே. வி. செல்வநாயகம், அக் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில், நான் உங்களுக்கு ஓர் அடையாளத்தை பெற்றுத் தருவேன் - என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், செல்வ நாயகம் கூறியதுபோன்று, பிற்காலத்தில் தமிழ் மக்களுக்கான தனித்துவமானதோர் அரசியல் பயணம் உருவாகியது உண்மை தான். ஆனால், இன்று தமிழ் மக்கள் வந்து சேர்ந்திருக்கும் இடமும், தமிழ் மக்களின் அடையாள அரசியல் எதிர்கொள்ளும் நெருக்கடி களையும் உற்று நோக்கினால், செல்வநாயகம் போன்றவர்களின் எதிர்வுகூறல்கள் அனைத்துமே கேள்விக்குறியாவிட்டது. ஆரம்பத் தில் செல்வநாயகம் தனிநாட்டு கோரிக்கையை ஆதரித்திருக்க வில்லை. ஆனால், 1970களுக்கு பின்னர் ஏற்பட்ட அரசியல் நிலை மைகள் அவரது சிந்தனையை மாற்றியிருந்தது. தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறும் நிலைக்கு அவரது அரசியல் நிலைப்பாடு சரிந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 1976இல் வட்டுக் கோட்டை தீர்மானத்தின் மூலம், தமிழர் அரசியல் வேறுஒரு பாதையை தெரிவு செய்யத் தொடங்கியது. ஆனால், வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் அடிப்படை யில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது, அதனை பார்ப்பதற்கு அவர் இருக்கவில்லை.

செல்வநாயகத்தின் மருமகனும், பிற்காலத்தில், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆலோசகராகவும் செயற்பட்டிருந்த, புகழ்பெற்ற அரசியல் பேராசிரியர், கலாநிதி ஏ. ஜே. வில்சன் குறிப்பிடுகின்றபோது, செல்வநாயகம் இயல்பிலேயே ஒரு தலைவர் என்பார். ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி, தமிழரசு கட்சியினால் குறிப்பிட்டுச் சொல் லக்கூடிய எதனையும் அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியவில்லை. தமிழ் மக்களுக்கான அடையாளத்தை உருவாக்குவதற்காக தோற்றம்கொண்ட கட்சி, இன்றோ வெறும் தேர்தல் அரசியலுக்குள் சிக்குண்டு சீரழிந்து கொண்டிருக்கின்றது.

செல்வநாயகம் தொடர்பில் உடன்படவும் முரண்படவும் ஏரா மான விடயங்கள் இருக்கலாம் ஆனால், அவரிடம் ஒரு தலைமைத் துவ ஆளுமை இருந்தது உண்மை. இன்றிருக்கும் எவரிடமும் இல்லாத ஒரு தலைமைத்துவ ஆற்றல் அவரிடம் இருந்தது. அதாவது, தன்னால் உருவாக்கப்பட்ட ஒரு கட்சி, குறிப்பிட்ட சூழலை கையாளுவதற்கு தகுதியற்றதென கருதியபோது, புதிய ஒன்றை உருவாக்குவதற்கு அவர் பின்நிற்கவில்லை. ஓர் அரசியல் கட்சி என்பது, மக்களுக்கான ஓர் அரசியல் ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத் தினால் பயனில்லை என்னும்போது, அதனை பாதுகாப்பதிலும் பயனில்லை. பயனற்றவைகள் வெறும் சுமைகளாகிவிடும்.

செல்வநாயகம் தான் உருவாக்கிய இலங்கை தமிழரசு கட்சியை புறம்தள்ளிவிட்டு, குறிப்பிட்ட சூழலை கையாளுவதற்காகவே தமிழர் விடுதலை கூட்டணியை ஸ்தாபித்தார். தனது எதிரியான ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வீடு தேடிச்சென்று, அவரையும் இணைத்துக் கொண்டார். தமிழ் மக்களுக்கு தேவையெனின், ஒரு தலைவன் என்பவன் தனது தன்முனைப்புக்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இந்தப் பண்பு செல்வநாயகத்திடம் இருந்தது. ஆனால், செல்வநாய கத்தை தனது தலைவராக கூறிக்கொள்ளும் சம்பந்தன் ஒருபோதும் செல்வநாயகத்திடமிருந்து எதனையும் கற்றுக்கொள்ளவில்லை. அப்படி கற்றுக் கொண்டிருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஒரு பலமான கட்சியாக இருந்திருக்கும். உண்மையில், இன்றிருக்கும் தமிழரசு கட்சிக் காரர்களுக்கும் செல்வநாயகத்திற்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடுண்டு.

# தமிழ் அரசியல் தரப்பு விழிப்படையவேண்டிய நிலை!

- அலசுவது **இராஜதந்திரி** -

ஜெனிவா பிரேரணை நிறைவேற்றப் பட்டுள்ளமை ஒருபுறமிருக்க, இலங்கை அரசு அப் பிரேரணையை நிராக ரித்த நிலையில் தமிழ் அரசியல் தரப்பினர் தமது அடுத்த நகர்வு குறித்து விரிவாகவும், நிதானமாகவும் சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மக்களின் நலனை முன்னி றுத்தியும், அவர்களது மனிதாபிமானப் பிரச் னைகளுக்கு தீர்வுகளை எட்டுவதோடு போர்க் குற்றங்கள் என்று கருதப்பட்டவற்றுக்கு தீர்வு களை காணும் விதத்திலும் ஜெனிவா பிரே ரணை பிரித்தானியாவினால் கொண்டுவரப் பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜெனிவா பிரேரணையை நிராகரித்துள்ள போதிலும், அது குறித்து சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத் தப்போவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் ஜெனிவா பிரேரணை போன்றதோர் ஏற்பாட்டினை எவ்விதத்திலும் கொண்டுவர முடியாத நிலை யில் தமிழ் அரசியல் தரப்பு காணப்படுகின்றது.

பிரித்தானியாவினால் ஏனைய ஜனநாயக ரீதியாக வளர்ச்சி கண்ட நாடுகளின் ஒத்து ழைப்போடு கொண்டுவரப்பட்ட ஜெனிவா பிரேரணையை இலங்கை அரசதரப்பினர் நிராகரித்துள்ளபோதிலும் அதன் உள்ளடக் கத்தை இலங்கை அரசு உணரச்செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தின் அழுத்தங் களை பிரயோகிக்கவைப்பதில் தமிழ் அரசியல் தரப்பினர் செயலாற்ற வேண்டியது அவசிய மானதாகின்றது.

**அரசு சகல கட்சிகளுடனும் பேச முஸ்தீபு**

அரச தரப்பு ஜெனிவா பிரேரணையால் எழக்கூடிய சிக்கல்களை தீர்ப்பது தொடர் பாக சகல கட்சிகளுடனும் பேசப்போவதாக தெரிவித்துள்ளது. இதுவிடயத்தில் தமிழ் அரசியல் தரப்பும் விழிப்படைய வேண்டியது இன்றியமையாததாகின்றது. அரச தரப்ப சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்போவதாக கூறியுள்ள நிலையில் தமிழ் அரசியல் தரப்பும் ஜெனிவா பிரேரணையின் உண்மைத்தன் மையை சகல அரசியல் கட்சிகளுக்கும் விளக் கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியமானதாகின்றது. ஏனெனில், அரச தரப்பு தனது தவறுகளை மூடி மறைக்கும் விதத்திலேயே தனது தரப்பு கருத்துக்களை ஏனைய கட்சிகளிடையே முன்வைக்கும். இக்கட்டத்திலேயே தமிழ் அரசியல் தரப்பு செயலில் இறங்க வேண்டியதாகின்றது.

ஆளும் தரப்பாக இருக்கலாம். எதிர் கட்சி யாக இருக்கலாம். இருதரப்பும் ஜெனிவா பிரேரணையை தமக்கு எதிரானதாக நோக்கும் நிலைப்பாடே காணப்படுகின்றது.

**“மைத்திரி-ரணில் அரசு”**

வடக்கு-கிழக்கு மக்களின் பேராதரவுடன் பதவிக்கு வந்த முன்னைய “நல்லாட்சி” ஆட்சி யாளர்களே ஜெனிவா பிரேரணையை உரிய வகையில் அமுல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், “மைத்திரி - ரணில்“ அரசுகூட ஜெனிவா பிரேரணைக்கு உரிய முக்கியத்துவ மளித்திருக்கவில்லை.

எனவே, தென்னிலங்கையில் முக்கிய அரசி யல் கட்சிகளின் ஜெனிவா பிரேரணை குறித்த நிலைப்பாடுகளை நன்கறிந்துவைத்துள்ள தமிழ் அரசியல் தரப்பு, பிரேரணையை நிறை வேற்றுவதில் வெற்றிகண்டிருந்த பிரித்தானி யாவினதும், அதனோடு இணைந்திருந்த நாடுகளினதும் ஒத்துழைப்பை தொடர்ந்து இறுக்கமாக பேணவேண்டியதே அவசிய மானதாகின்றது. ஏனெனில், ஜெனிவா பிரே ரணையை நிராகரித்திருப்பதன்மூலம் இலங் கையின் ஆட்சியாளர்கள் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் உண்மைத் தன்மையை அறிந்துகொள் வதற்கும், ஜெனிவா பிரேரணையை இலங்கை அரசு நிராகரித்த நடவடிக்கை நல்ல எடுத்துக் காட்டாக இருக்கின்றது.

**எதிர்கட்சியின் ஒத்துழைப்பு**

இதேவேளை, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, ஜெனிவா விடயத்தில் இலங்கையரசுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இலங்கையில் எந்தவொரு பலம் வாய்ந்த அரசியல் கட்சியும் போர்க்குற்றங் களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்ற இராணுவத்தினரை காப்பாற்றவே முயலும். இதனையே இன்றைய ஆட்சியாளர்களின் ஜெனிவா பிரேரணை நிராகரிப்பும் எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அரசுக்கு ஆத ரவுவழங்கப்போவதாக தெரிவித்துள்ளமையும் எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

இத்தடவை கொண்டுவரப்பட்ட ஜெனிவா பிரேரணை தமிழ் அரசியல் தரப்பின் கடந்த கால ஜெனிவா பிரேரணைகள் குறித்து விடப் பட்ட தவறுகளையும் திருத்தவேண்டிய அவ சியத்தை இடித்துரைப்பதாக இருக்கின்றது.

மறுபுறத்தே, சர்வதேச சமூகத்தையும் முன்பில்லாதவாறு பெரிதும் தங்கியிருக்க வேண்டிய நிலையையும் தமிழ் அரசியல்தரப் புக்கு ஏற்படுத்திவிட்டுள்ளது.

**ஒதுங்கிக்கொண்ட இந்தியா**

இந்தியா இனிவரும் காலங்களில் இலங் கையின் வடக்கு-கிழக்கு தமிழர்கள் தொடர் பாக உறுதியான நிலைப்பாடுகளை எடுக்கு மென்று எதிர்பார்க்க முடியாது. இத்தடவை ஜெனிவா பிரேரணையை நிறைவேற்றுவதில் இந்தியா தன்னை ஒதுக்கி வைத்துக்கொண்டமை இதற்கு ஒரு நல்ல சான்றாக இருக்கின்றது.

எனவே, தமிழ் அரசியல் தரப்பு ஜெனிவா பிரேரணை தொடர்பில் புதிய வியூகங்களை வகுக்கவேண்டியது அவசியமானதாகின்றது. ஏனெனில் ஜெனிவா பிரேரணையே வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக ஒரு

(15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
திறமைக்கேற்ற நன்மை பெற்று பெருமை அடைவீர்கள். குடும்பத்தினருக்கு ஏற்பட்டிருந்த மருத்துவச் செலவுகள் தீரும். விரைந்து செயல்பட்டுத் தேங்கிய பணிகளை முடிப்பீர்கள்.

**இடபம்**
சுறுசுறுப்புடன் செயல்பட்டு பணிகளை நிறைவேற்றுவீர்கள். ஆரோக்யத்தில் சோர்வு ஏற்படுவது போல் தோன்றினால் அது கற்பனையே. மனதை அரித்துக் கொண்டிருந்த வருத்தங்கள் விலகும்.

**மிதுனம்**
பிரச்னையைப் பேசித் தீர்ப்பதன்மூலம் நிம்மதி வரும். உறவினர்களிடையே ஏற்படும் சண்டையைத் தீர்ப்பீர்கள். உற்சாகமாகப் புதுமை படைப்பீர்கள். பணியாளர் சுமைகள் தீரும்.

**கடகம்**
நண்பர் சண்டையில் இதமாகப் பேசி மத்யஸ்தம் செய்வீர்கள். உறவினர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்ள வாய்ப்பு வரும். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேச வேண்டாம்.

**சிம்மம்**
பயமுறுத்தும் பேச்சும், அவசரமான செயல்களும் வேண்டாம். வேகமான முடிவுகளை எடுக்காமல் நிதானமாக சிந்தியுங்கள். உற்சாகத்துடன் எதிலும் புகுந்து கலக்கும் ஆற்றல் வரும்.

**கன்னி**
பணியிடத் திறமைகளை நன்கு வளர்த்துக் கொள்வீர்கள். மனதில் கற்பனை விரிவடையும். பொது வாழ்வில் ஈடுபடுவீர்கள். வருந்தும் நண்பர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவீர்கள்.

**துலாம்**
ருசித்து உண்ணும் வாய்ப்பு வரும். வருத்தங்கள் தீரும். பணியிடத்தில் செயல்களைத் திறம்படச் செய்யும் ஆற்றல் வரும். அன்பளிப்பு வரும். எதையும் அமைதியாக எதிர்கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
பணியாளர்களுக்கு முன்பிருந்த தொல்லைகள் அகலும். பணத் தேவைகள் நிறைவடையும். மதிப்பு கூடும். எடுத்த முயற்சி வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும்.

**தனுசு**
படிப்படியாகப் பிரச்னைகளிலிருந்து வெளியே வருவீர்கள். கனவு நனவாகும். வெற்றிக்கு உடன்பிறப்புகள் உதவுவர். முயற்சிகளில் மாற்றம் செய்து நன்மை அடைவீர்கள்.


**மகரம்**
பிள்ளைகளின் நன்மைக்கான முயற்சிகளில் வெற்றி உண்டு. திறம்பட செயல்பட்டு அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எதிர்பார்க்கும் ஊதிய உயர்வு, இடமாற்றம் கிடைக்கும்.

**கும்பம்**
சொந்தமாக வீடு, வாகனம் வாங்கத் திட்டம் தீட்டி மகிழ்வீர்கள். சிறு லாபம் உண்டு. எடுக்கும் முயற்சி ஒன்று வெற்றி தரும். பணியிட சகாக்களுடன் முன்பைவிட ஒற்றுமை பலப்படும்.

**மீனம்**
எதிர்ப்பை எதிர்கொள்ள தயாராவீர்கள். வீண் பழி நீங்கும். யாரைப் பற்றியும் யாரிடமும் புரளி பேச வேண்டாம். அவசரப் பேச்சினால் பிரச்னையில் மாட்டாமல் இருக்கப் பாருங்கள்.

# இரண்டு பிரதான கட்சிகளையும் மாறி மாறி ஆட்சியில் அமர்த்துவது ஆட்சிமாற்றமல்ல!

## சீமான் ஆவேசம்



சென்னை, ஏப். 01

ஆட்சி மாற்றம் என்பது இரண்டு பிரதான கட்சிகளையும் மாறி மாறி ஆட்சியில் அமர்த்துவது இல்லை என நாம் தமிழர்கட்சியின்தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

போரூரில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஆட்சி மாற்றம் என்பது தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய கட்சிகளை மாறி மாறி ஆட்சியில் அமர்த்துவது அல்ல. அப்படி செய்வதால் ஆட்கள்மாறுவார்கள். ஆனால்நிர்வாகம் மாறாது. கடந்த 50 வருடங்களாக செய்யாத நல்லதை 5 ஆண்டுகளில் எப்படி செய்வார்கள் என நம்பு கிறீர்கள். கல்வி மானுட உரிமை. அதை கொடுப்பது அரசின்கடமை. நான் வாக்குக்காக நிற்க வில்லை. நாட்டுக்காக நிற்கிறேன். அதிமுகவின் வெற்றி என்பது நிகழ்வு. நாம்தமிழர் கட்சியின் வெற்றி என்பது வரலாற்றின் மாபெரும் புரட்சி-என்றார்.

# அரசியலுக்கு தாமதித்து வந்தமைக்கு மன்னிப்பு கோரினார் கமல்ஹாசன்

சென்னை, ஏப். 01

அரசியலுக்கு தாமதமாக வந்ததற்காக ஊர் ஊராகச் சென்று மன்னிப்பு கேட்கிறேன் என மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மதுரை அவனியாபுரத்தில் தேர்தல் பிரசாரத்தில் பேசிய கமல்ஹாசன் கூறியதாவது:

நான் அரசியலுக்கு வராமல் அதுக்கெல்லாம் ஆள் இருக்கிறார்கள் என நினைத்து நான் நமது வேலையைப் பார்ப்போம் என எனது வேலையை மட்டும் பார்த்தேன். அது தவறு என்பது 25 ஆண்டுக்கு கழித்து புரிந்து கொண்டேன். அதற்காகத்தான் தற்போது ஊர் ஊராகச் சென்று மன்னிப்புக் கேட்டு கொண்டு வருகிறேன்.

இப்போது ஒரு முடிவோடு வந்திருக்கிறேன். கட்சி தொடங்கியபோது மதுரையில் சொன்னேன், என்னுடைய எஞ்சிய வாழ்நாட்கள் எல்லாம் என் மக்களுக்குக்காகத்தான் எனச் சொன்னேன். இந்த முடிவோடுதான் வந்திருக்கிறேன்.

இது வெறும்வசனமில்லை. ஒவ்வொரு அடியிலும் முயற்சியிலும் உங்களுக்குத் தெரியும். இந்தப் பகுதியில் தொழிற்சாலைகள், ஐ.ரி நிறுவனங்களைக்கொண்டு வரவேண்டியது எங்களது பொறுப்பு.

ஊழல் கட்சி ஆண்டு கொண்டிருக்கிறது. அதற்கு மாற்று மற்றொரு ஊழல் கட்சியல்ல. அதற்கு மாற்று நேர்மையான கட்சிதான். அதே மாதிரி வன்முறையாளர்களை ஒடுக்குவதற்கு சட்டத்தைத்தான் கையிலெடுக்க வேண்டும். இதற்காக வரும் என நினைத்துத் தான் மக்கள் நீதி மய்ய வழக்கறிஞர் படையை பலமாக வைத்தேன். வெற்றியை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்சியின் வெற்றிக்கான காரணம் என்னவென்பது கட்சிப் பெயரில் இருக்கிறது. அதை மக்கள்தான் தூக்கிப் பிடித்திருக்கிறார்கள்.

புதிதாக வாக்குபோட வருகிறவர்கள்புதிதாக அரசியலைப் புரட்டிப்போட வருகிறார்கள். அதை அவர்கள் செய்து காண்பிக்க வேண்டும். -என்றார்.

# உதட்டளவில் சேவை செய்யும் கமல்

## வானதி சீனிவாசன் விமர்சனம்



சென்னை, ஏப். 01

உதட்டளவில் சேவை செய்யக் கூடியவர் கமல் ஹாசன் என்று கோவை தெற்கு தொகுதி பா.ஜ.க வேட்பாளர் வானதி சீனிவாசன் விமர்சித்துள் ளார்.

மக்கள் நீதி மய்யம் வானதி யைத் துக்கடா அரசியல்வாதி என்று கூறியிருந்த நிலையில், வானதி சீனிவாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோவை தெற்கு தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் வானதி சீனிவாசனை ஆதரித்து அண்மையில்பிரசாரத்தில் ஈடுபட்ட மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, 'மக்களுடைய பிரச்னைகள், அதற்கான தீர்வுகள், ஆட்சி நிர்வாகம் பற்றிய புரிதல் தொடர்பாக வானதி சீனிவாசனுடன் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன்விவாதம் செய்யத்தயாரா?' என்று சவால்விடுத்தார்.

இதற்கு பதிலளித்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கே.குமாரவேல் வெளியிட்ட அறிக்கையில், 'முதலில், பிரதமர் மோடியுடன் விவாதம் செய்ய கமல் விரும்புகிறார். அதையடுத்து, நிதியமைச்சர் நிர்மலா, அடுத்தடுத்து பா.ஜ.க அமைச் சரவையினர் ஒவ்வொருவருடனும் விவாதம் செய்துவிட்டுக் கடைசியாக துக்கடா தலைவர் வானதி சீனிவாசனுடன்விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்' என்று தெரிவித்தார்.

இந்நிலையில் வானதி சீனிவாசன், 'ஒவ்வொரு பெண்ணும் கஷ்டப்பட்டு தான் வாழ்க்கையில் முன்னேறி வருகிறார்கள். இப்படி முன்னேறி பொது வாழ்க் கைக்கு வரும் பெண்களுக்கு இவர்கள் வைக்கும் விமர் சனம் இதுதான் என்று கூறினால், பெண்களை இவர் கள்காப்பாற்றுவார்களா? பெண்கள் நலனில் அக்கறை செலுத்துவார்களா?, மக்கள் நீதி மய்யமும், கமலும் இதற்கு பதில் சொல்லட்டும்' என்று கூறியிருந்தார். இதற்குக் கமல் தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப் படாத நிலையில், உதட்டளவில் மட்டுமே சேவை செய்யக் கூடியவர் கமல்ஹாசன் என்று வானதி விமர்சித்துள்ளார்.

# முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன் ஸ்கூட்டி ஓட்டிக்கொண்டே பிரசாரம்!



சென்னை, ஏப். 01

புதுச்சேரி முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன் காரைக்கால் தொகுதியில் ஸ்கூட்டி ஓட்டிக்கொண்டே வாக்குச் சேகரித்ததால் மக்கள் உற்சாகமடைந்தனர்.

காரைக்கால் மாவட்டம், திருநள்ளாறு சட்டப் பேரவைத் தொகுதியில் முன்னாள் அமைச்சரும், மாநில காங்கிரஸ் துணைத் தலைவருமான ஆர்.கமலக் கண்ணன் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகிறார்.

திருநள்ளாறு, பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று ஆர்.கமலக்கண்ணன் வாக்குச் சேகரித்தார். அவருடன் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழகம் மற்றும் புதுச்சேரியின் பொறுப்பாளருமான சஞ்சய் தத்தும் இணைந்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது 2 பேரும் மோட்டார் சைக்கிளில் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து வாக்குகளைக் கோரினர். கமலக்கண்ணன் மோட்டார் சைக்கிள் ஓட்டினார். முன்னாள் அமைச்சர்வண்டி ஓட்டிக்கொண்டே வாக்குச் சேகரித்த நிகழ்வு தொகுதி வாக்காளர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலையில் நாமல்

திருமலை, ஏப். 01

கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தேசிய நிகழ்ச்சி திட்டத்துக்கான திருகோணமலை மாவட்டக் கூட்டம், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில், திருகோணமலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக கபில நுவான் அத்துக்கோரள, எம்.எஸ். தௌபீக் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், மாவட்ட செயலாளர் சமன் தர்சன பாண்டிகோரள உள்ளிட்டோரும் பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 25 மாவட்டங்களிலும் நகரவன பயிர்ச்செய்கை

கொழும்பு, ஏப். 01

நடைபாதை ஒழுங்குடன் நகர வன பயிர்ச்செய்கை 25 மாவட்டங்களிலும் உருவாக்கப்படும் என்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கின்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மீள் உருவாக்கும் சக்தியை மேம்படுத்தி, சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

சுற்றாடலுக்கு காபனை வெளியிடுவது, அசேதன பசளைப் பாவனை, அதிக மின்சார பயன்பாடு என்பன தற்சமயம் உயர்வடைந்துள்ளன. இவ்வாறான விடயங்களை கருத்திற்கொண்டு புதியதிட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது-என்றார்.

# அதிக விலைக்கு அரிசி விற்ற 1500 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஏப். 01

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த வர்த்தகர்கள் 1,500 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் அதிகார சபை தயாராகியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த வர்த்தகர்கள் இனங்காணப்பட்டனர்.

பல பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்கள் அரிசியை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல், விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாமை, அரிசியைப் பதுக்கியமை உள்ளிட்ட குற்றங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

இவ்வாறு தவறிழைப்போரை கைது செய்யுமாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன நுகர்வோர் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து

# மணிவண்ணன், மயூரனை நீக்க இடைக்காலத் தடை உறுதி!

## காங்கிரஸின் மேன்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஏப்.01

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்களான விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் மயூரன் ஆகிய இருவரையும் அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடைக் கட்டளையை உறுதி செய்து யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டது.**

அத்துடன் அதனை எதிர்த்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி. மணிவண்ணன், உள்ளிட்ட உறுப்பினர்கள் தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி, யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில் வி.மணிவண்ணனின், மயூரன் உள்ளிட்டவர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார். ஏனைய சக உறுப்பினர்களுக்கும் அவர் தனித்தனியே மனுக்களைத் தாக்கல் செய்தார்.

மனுக்களின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

அதனை ஏற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் ஆரம்பத்தில் கட்டாணை வழங்கி பிரதிவாதிகளின் ஆட்சேபனை விண்ணப்பத்தின் பின்னர் இடைக்காலக் கட்டளையை வழங்கியது.

மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை ஆட்சேபித்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் பாலேந்திரன் சசி மகேந்திரன், தாவூத் லெப்பை அப்துல் மனாப் ஆகியோர் அடங்கிய யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வின் முன் விவாதங்கள் இடம்பெற்றன.

அமர்வு நேற்று அதன் கட்டளையை வழங்கியது.

வி.மணிவண்ணன், மயூரன் ஆகியோரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தீர்மானத்துக்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடைக் கட்டளையை உறுதி செய்தது.

அத்துடன் அதனை எதிர்த்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

# அமெரிக்க வங்கியில் நூதனக் கொள்ளை!

## வங்கிக் கணக்கில் பெருந்தொகை பணத்துடன் சாவகச்சேரி நபர் கைது

கொழும்பு, ஏப். 01

வெளிநாடுகளில் உள்ளவர்களின் வங்கிக் கணக்குகளில் உள்ள பணத்தை மோசடியாக கைப்பற்றி நாட்டில் உள்ளவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பி வைக்கும் குழுவின் அங்கத்தவர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 14 கோடி ரூபா பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவிக்கையில்-

சாவக்கச்சேரி பகுதியில் 41 வயதான ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு தனியார் வங்கிக் கணக்கு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது மகளுக்கு 1 கோடியே 34 இலட்சத்து 23 ஆயிரத்து 297 ரூபா வெளிநாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருக்கும் சிலரினால் அங்குள்ளவர்களின் வங்கிக் கணக்குகளில் சட்ட விரோதமாக பிரவேசித்து இணைய வழி மூலம் இலங்கைக்கு பணம் அனுப்பி வைக்கப்படுவதாக பல முறைபாடுகள் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்துள்ளன. 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இதுவரை 14 கோடி ரூபா இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் பதிவாகியுள்ளன. இதில் ஒன்றாகவே இச்சம்பவம் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்படும் பணத்தை பெறுவோருக்கு ஒரு தொகை பணத்தை வழங்கிவிட்டு மிகுதி தொகையை மோசடிகாரர் பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

பணத்தை தூய்மைப்படுத்தல் சட்டதிற்கு அமைவாக இது குற்றச்செயலாகும். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்-என்றார்.

# செட்டிகுளம் பிரதேசப் பாடசாலைகளிலிருந்து 3 மாதங்களில் 28 மாணவர்கள் இடைவிலகல்

வவுனியா, ஏப். 01

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்ற 28 மாணவர்கள் கடந்த 3 மாதங்களில் பாடசாலையை விட்டு இடை விலகியுள்ளனர். அவர்களை மீள இணைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் கே. சுலோஜனா தெரிவித்துள்ளார்.

சிறுவர், பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான 3 மாத காலப்பகுதியில் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து 28 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாக கிராம அலுவலர் ஊடாக தெரியப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் இந்த மாணவர்கள் இடைவிலகியமைக்கான காரணத்தை கண்டறிந்து அவர்களை மீளவும் பாடசாலை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை, கிராம அலுவலர்கள் மற்றும் எமது பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், பாடசாலை இடைவிலகும் மாணவர் விவரத்தை அதிபர்கள் எமது பிரதேச செயலகத்திற்கு வழங்கினால் அவர்களை மீள் இணைப்பதற்கான நடவடிக்கைகளை கிராம அலுவலர் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஊடாக முன்னெடுக்க முடியும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஜனநாயக ரீதியில் போராட நாம் தயார்

*சஜித் பிரேமதாஸ கூறுகிறார்*



கொழும்பு, ஏப். 01

**அரசாங்கத்தின் சில செயற்பாடுகளால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்-

நாட்டுக்கு வேண்டும் என்றே புற்றுநோயை உண்டாக்க கூடிய எண்ணெய்யை இறக்குமதி செய்யப்படுகின்றது. அது தேசிய பாதுகாப்பு தொடர்பான பிரச்னையாக நான் கருதுகின்றேன். ஆகவே இன்று தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

இந்த அரசாங்கமே மக்களின் பாதுகாப்பை துச்சமாக மதித்து செயற்படும் அரசாங்கம். மக்களை அழிப்பதல்ல அரசாங்கத்தின் பொறுப்பு, மாறாக அவர்களை வாழ வைப்பதே அரசாங்கத்தின் பொறுப்பு என கூற வேண்டும். தரமற்ற எண்ணையை நாட்டுக்கு கொண்டு வந்த அனைவரும் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டு சட்டம் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த நாம் ஜனநாயக ரீதியில் போராட தயார்-என்றார்.

# தகவல் தொழில்நுட்பத்துறையில் 10000 மாணவர் இணைக்கப்படுவர்

கொழும்பு, ஏப். 01

பட்டப்படிப்புக்கு பத்தாயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்குள் தகவல் தொழில்நுட்பத் துறையில் 200,000 மனிதவளத்தை இணைத்துக்கொள்வதே இதன் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கணினி தரவு அறிவியல் மற்றும் மென்பொருள் பொறியியல் தொடர்பான புதிய தொழில் வாய்ப்பு சார்ந்த பட்டப்படிப்புக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி அஜித் ஜீ மதுரபெரும இதனை தெரிவித்தார்.

தற்போதைய தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஏற்றவாறு கற்கைநெறி திருத்தப்பட்டுள்ளதுடன், இதனை இணைய வழித் தொழில்நுட்பத்தின் மூலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணி ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை www.vgc.ac.lk. மற்றும் www.ou.ac.lk/bsehons என்ற இணையத்தளங்களில் பதிவிறக்கம் செய்துக் கொள்ள முடியும்.



# தேர்தல் முறையில் திருத்தம் அவசியம்

*மாவை சேனாதிராசா கூறுகிறார்*

மட்டக்களப்பு, ஏப். 01

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு முன்பாக அதில் திருத்தங்களை கொண்டுவருவதில் அவசியம் உள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யவேண்டிய தேவையுள்ளது. என்ன திருத்தம் என்பது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் எமது கட்சியின் உறுப்பினர்கள் கருத்து தெரிவிப்பார்கள். அவ்வாறான பிரேரணையொன்று கொண்டு வரப்படும்போது அது தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் தீர்மானம் முன் வைக்கப்பட்டால் அது தொடர்பில் கட்சி ஆராய்ந்து அதற்கு ஏற்றாற்போல் தீர்மானம் எடுக்கும். தேர்தல் முறைமை என்பது கட்டாயமாக மாற்றப்பட வேண்டும். முதலாவதாக மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற உறுதிப்பாடு இந்த அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும். ஐ.நா மனித உரிமை பேரவையில்கூட அது சொல்லப்பட்டுள்ளது.தேர்தல் முறையில் பல பிழைகள் காணப்படுகின்றன. எல்லை நிர்ணயம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. எதை அரசாங்கம் முன்வைக்கப் போகின்றது என்பதை அறிந்த பின்னர் அது தொடர்பில் ஆராய்ந்து எங்களது நிலைப் பாட்டினை வெளிப்படுத்து வோம் - என்றார்.

(அ)

# இலங்கை ரூபா பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 01

இலங்கை வரலாற்றில் அண்மைக்காலமாக தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வரும் ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சி யடைந்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலரின் விற்பனை விலை 202.04 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 197.62 ஆக பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(அ)

# கொரோனாவிலிருந்து விரைவில் குணமடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னிலை!

கொழும்பு, ஏப். 01

கொரோனா நோயாளர்கள் விரைவில் குணமடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கை தொடர்ந்தும் முன்னிலை வகிக்கிறது.

அதன்படி இலங்கையில் நோய் தொற்றுக்கு உள்ளானவர்கள் குணமடையும் சதவீதம் 96.45 சதவீதமாகப் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இந்தியா 2ஆம் இடத்திலும் ரஷ்யா 3ஆவது இடத்திலும் உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் இதுவரை 92 ஆயிரத்து 442 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 89 ஆயிரத்து 90 பேர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 2 ஆயிரத்து 786 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம், நாட்டில் பதிவாகியுள்ள மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 566 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை நீதிமன்றில் பணியாற்றும் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை!

யாழ்ப்பாணம், ஏப். 01

பருத்தித்துறை நீதிமன்ற நீதிமன்றத்தில் பணியாற்றும் ஊழியர்கள், சட்டத்தரணிகள் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சடுதியாக அதிகரித்துவரும் கொரோனா தொற்று அச்சம் காரணமாக குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நீதிமன்றத்துக்குச் சென்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இன்று அல்லது நாளை குறித்த முடிவுகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 01

சுமார் ஒரு கோடி பெறுமதியான ஒரு கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரித் திணைகளத்தின் சாவகச்சேரி நிலைய பொறுப்பதிகாரி அசோகரட்ணத்தின் அறிவுறுத்தலில் மதுவரிப் பரிசோதகர் வசீகரனின் தலைமையில் மல்லாகம் மற்றும் பருத்தித்துறை மதுவரி நிலைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் மாலை முன்னெடுத்த சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து உயிர்க் கொல்லி போதைப் பொருளான ஹெரோயின் ஒரு கிலோ கிராம் கைப்பற்றப்பட்டது.

அதன் பெறுமதி சுமார் ஒரு கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

# சலுகை விலையில் பொருட்களை பெற கிராமப்புறங்களில் சந்தை பொறிமுறை

*அமைச்சர் பந்துல தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 01

கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு சலுகை விலையில் பொருட்களைப் பெறுவதற் கான சந்தைப் பொறிமுறை அமைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூர் உற்பத்தியாளர் களை ஊக்குவிக்கும் திட்டத் தின் ஒரு பகுதியாக இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்?ஷவின் தேசிய கொள்கை அறிக்கையின் கீழ் உள்ளூர் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் விதமாக அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மேலும் பொதுத்துறையின் தலையீட்டால் உயர்தரப்



பொருட்களை நியாயமான விலையில் வழங்க முடியும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை மீறல்கள் புரிந்த குற்றவாளிகள் மீது பயணத்தடை

## கனடாவின் எதிர்க்கட்சி கோரிக்கை

ஒட்டாவா, ஏப். 01

**இலங்கையில் பாரிய மனித உரிமைக் குற்றங்களுக்கு காரணமானவர்கள் மீது பயணத்தடையை விதிக்குமாறு, கனடாவின் உத்தியோகபூர்வ எதிர் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி, கனேடிய அரசைக் கோரியுள்ளது.**

கனடாவில் நடைமுறையில் உள்ள மக்கன்சி சட்டவிதிகளின் பிரகாரம் அதனை நடைமுறைப் படுத்துமாறும், கன்சவேட்டிவ் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான நிழல் அமைச்சர் மைக்கல் சொங்கும், சர்வதேச அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகளுக்கான நிழல் அமைச்சர் கார்னட் ஜீனியசும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

தாம்இனப்படுகொலை குறித்த சுயாதீனசர்வதேசவிசாரணையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதை நினைவு கூர்ந்துள்ள அவர்கள், ரூடோதலைமையிலான லிபரல்அரசு அது குறித்து அமைதி காப்பது குறித்து தமது விசனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

2019 இல் இறுதியாக நடைபெற்ற கனேடிய பொதுத்தேர்தலுக்கு முன்னர்கனேடியப்பாராளுமன்றத்தில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் தமிழர் இனப்படுகொலை குறித்து சுயாதீன சர்வதேச விசாரணையை நடாத்த வேண்டும் என ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற தீர்மானத்தை சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சி, அது குறித்து மேலதிக நடவடிக்கைகள் இது வரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சமீபத்தில் ஜெனிவாவில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கடந்த காலங்களை விட முன்னேற்றகரமாக அமைந்தாலும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் மீதான சுயாதீன சர்வதேச விசாரணையையோ அல்லது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல விடயங்களையோ அது உள்ளடக்கவில்லை எனவும் கனேடிய எதிர்கட்சி கரிசனை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் பொறுப்புக்கூறல் விடயத்தில் எவ்வித முன்னெடுப்புக்களை செய்வதற்கான முறைமைகளையோ, விருப்பையோ கொண்டிருக்கவில்லை என்ற ஆணையாளரின் கூற்றை சுட்டிக்காட்டியுள்ளது. இந்நிலையில், கோரிக்கைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகளை கனேடிய அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி யுள்ளது.

இலங்கை அரசு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் மற்றும் தமிழர்கள் மீது சமீபத்தில் விதித்துள்ள தடைகள் குறித்து தமது ஆழ்ந்த கரிசனையை வெளியிட்டுள்ள அறிக்கை, மனித உரிமையை முன்னேற்ற தொழிற்படும் கனேடிய தமிழர் அமைப்புக்களின் நியாயபூர்வமான விமர்சனங்களை தடைகள் மூலம் எதிர்கொள்வது முறையல்ல எனவும் கடிந்துள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் பல நிலைமைகளை தனது அறிக்கையில் குறிப்பிட்டு அவை குறித்து தனது ஆழ்ந்த கரிசனையையும் கனேடிய எதிர்கட்சி வெளியிட்டுள்ளது.

அதில் சமீபத்தில் இடித்தொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத்தூபி விடயத்தையும் நினைவு கூர்ந்து, போரில் கொல்லப்பட்டவர்களுக்கான பொதுமக்கள் நினைவு ஒன்றுகூடல்கள் தடுக்கப்படுவது குறித்த கரிசனையையும் வெளியிட்டுள்ளது.

## இலங்கைத் தூதரை ஏற்க மறுக்கின்றதா இந்தியா?

கொழும்பு, ஏப். 01

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொறகொடவின் நியமனத்தை அந்நாடு நிராகரித்துள்ளதாக வெளியாகியுள்ள தகவலை இலங்கை மறுத்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொறகொடவின் நியமினத்தை அந்நாடு நிராகரித் துள்ளதாகவும், எனவே, இது தொடர்பில் அரசு மீள் பரி சீலனை செய்யுமா எனவும் ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

'அமைச்சரவைக்கு அவ்வாறானதொரு அறிவிப்பு விடுக்கப்படவில்லை. எனக்கு தெரிந்தவரை மிலிந்த மொரகொடவே இந்தியா செல்லவுள்ளார்" - என்றார்.

## பொதுமக்கள் ஒன்றுகூடி செயற்பட அனுமதியில்லை

கொழும்பு, ஏப். 01

பொதுமக்கள் பெரும்பாலானோர் ஒன்று கூடி செயற்பட அனுமதி வழங்கப்படமாட்டாது என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய் மற்றும் கொவிட் தொற்று கட்டுப்பாட்டுத் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இந்நிலையில், புத்தாண்டு காலத்தில் கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் மீண்டும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே சுகாதார வழிகாட்டிகளைக் கட்டாயம் பின்பற்றவேண்டும்.

கடந்த ஜனவரி மாதம் மக்கள் ஒன்றுகூடியமையால் பெப்ரவரி மாதம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

தற்போது கொரோனா தொற்று காரணமாக நடைமுறையில் உள்ள சுகாதார சட்டமுறையில் எதுவும் புத்தாண்டு காலங்களில் தளர்த்தப்படாது. அத்தோடு, பொது மக்கள் பெரும்பாலானோர் ஒன்று கூடி செயற்பட அனுமதி வழங்கப்படமாட்டாது-என்றார்.

## இரத்தப் பரிசோதனை மூலமே தொற்றாளரை இனங்காணலாம்

### புதிய முறை கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப். 01



கொரோனா தொற்றின் நோய் எதிர்ப்பு சக்தியை இனங்காணும் இலகுவான இரத்தப் பரிசோதனை முறைமையை இலங்கையரான பேராசிரியர் நீலிகா மாலவிகே உள்ளிட்ட ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிபுணர் குழு இணைந்து கண்டுபிடித்துள்ளது.

விரல் நுனியிலிருந்து எடுக்கப்படும் ஒரு சொட்டு இரத்தத்தை கொண்டே இந்த பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பரிசோதனை முறைமை மிக விரைவான மற்றும் செயன்முறைக்கு இலகுவானதென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, தாய்வான், இந்தியா, தாய்லாந்து, பிரான்ஸ் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த ஆய்வாளர்களும் இந்த ஆய்வில் பங்கேற்றுள்ளனர்.

3,000 இரத்த மாதிரிகளை கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைகழக விசேட நிபுணர்குழுவில் பங்கேற்றிருந்த சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறை பேராசிரியர் நீலிகா மலவிகே தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## லக்ஷ்மன் கிரியெல்லவின் மகள் மாகாணத் தேர்தலில் போட்டி?

கொழும்பு, ஏப். 01

இவ்வருடத்துக்குள் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் லக்?ஷ்மன் கிரியெல்லவின் மகளான ஷாமி கிரியெல்ல போட்டியிடவுள்ளார் என தெரியவருகின்றது.

மத்திய மாகாணசபைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அவர் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

அதேவேளை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ராஜரட்னத்தின் மகனான ஜனார்த்தனும் கண்டி மாவட்டத்தில் சஜித் அணியில் களமிறங்கவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



# மாகாணசபைத் தேர்தல்: போனஸ் ஆசனங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 01

மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையின்கீழ் நடத்துவது என்பது குறித்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி இறுதி முடிவை எடுப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்?ஷ தீர்மானித்துள்ளார் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த இணையவழி ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன் தினம் நடைபெற்றது. இதன்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மாகாணசபைத் தேர்தல் முறைமையை மறுசீரமைப்பது தொடர்பான சட்ட வரைவு அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. ஸ்தீரமானதொரு மாகாணசபையை உருவாக்கும் நோக்கில் போனஸ் ஆசனங்களை அதிகரிக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது. தற்போது மாகாணமொன்றில் அதிகூடிய வாக்குகளைப்பெறும் கட்சிக்கு 2 போனஸ் ஆசனம் வழங்கப்படுகின்றது. மேற்படி யோசனையின் பிரகாரம் மாவட்ட ரீதியில் 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும்.

அந்தவகையில் மேல் மாகாணத்தில் 3 மாவட்டங்கள் உள்ளன. இதுவரை 2 போனஸ் ஆசனங்கள் வழங்கப்பட்ட நிலையில் அந்த எண்ணிக்கை 6 ஆக அதிகரிக்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. அதேபோல வடமத்திய மாகாணத்தில் இரண்டு மாவட்டங்கள் உள்ளன. அங்கு போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையை 4 ஆக அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக பிரதேசத்துக்கு பொறுப்புக்கூறவேண்டிய பிரதிநிதி இருக்க வேண்டும் என்பதால் 70 வீதம் தொகுதி அடிப்படையிலும் 30 வீதம் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்வதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், தொகுதியொன்றில் ஒரு கட்சி மூன்று வேட்பாளர்களை நிறுத்த முடியும் என்ற திட்டமும் முன்வைக்கப்பட்டது. இவ்விவகாரம் தொடர்பில் அமைச்சர்களும் கருத்துகளை முன்வைத்தனர். இதனையடுத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, இறுதி முடிவொன்றை எடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார். பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக்கட்சிகளும் அமைச்சரவையில் இடம்பெறவில்லை. எனவே, அக்கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்கும் நோக்கிலேயே கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென் தமிழ்நாடு அரசியல் எப்படி உள்ளது? தொழில் வளர்ச்சி சிக்கல் என்ன செய்யும்?

**(நடக்கவுள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தெற்கு, வடக்கு, மேற்கு, நடு என்று மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் அரசியலைத் தீர்மானிக்கும் வாய்ப்புள்ள காரணிகள் எவை, அங்கு நிலவும் சமூக, பொருளாதார நிலைமை என்ன என்பதை ஆராய்ந்து தொடர் கட்டுரை களாக வெளியிடுகிறோம். இந்தத் தொடரின் முதல் கட்டு ரையாக தென் மாவட்டங்களின் நிலையைக் காட்டும் இந்தக் கட்டுரை வெளியாகிறது)**

**ஏ.ஆர்.மெய்யம்மை - பிபிசி தமிழுக்காக**

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தற்போது அமைக்கப்பட்ட தென்காசி ஆகியவை பெரிதாக வளர்ச்சி காணவில்லை.

இன்றும் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு இளைஞர்கள் வேலை தேடி பெருநகரங்களான சென்னை, பெங்களூரு நோக்கியே சென்ற வண்ணம் இருக்கின்றனர். இரண்டாம் நிலை மாநகரமான கோயம்புத்தூருக்கும் கூட கடந்த சில ஆண்டுகளாகச் சென்று கொண்டிருக்கின்றனர் என்பது தென் மாவட்டங்கள் மத்திய, மாநில அரசாங்கங்களால் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

மொத்தமுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் 58 தொகுதிகள் தென் மாவட்டங்களில் அமைந்திருக்கின்றன. இதில் மதுரையில் அதிகப்படியாக 10 தொகுதிகளும், விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 7 தொகுதிகளும் அமைந்துள்ளன. சுமார் ஏழேகால் கோடி மக்கள் தொகை (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு) கொண்ட தமிழ்நாட்டில் ஏறத்தாழ இரண்டு கோடி மக்கள் தென் மாவட்டங்களில் வாழ்கின்றனர். அதில் அதிகப்படியாக 33.22 லட்சம் பேர் திருநெல்வேலி மாவட்டத்திலும் 30.38 லட்சம் பேர் மதுரை மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.

**கிடப்பில் போடப்பட்ட தொழில் வளர்ச்சி திட்டம்**

தென் மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்காக தீட்டப்பட்ட பல திட்டங்கள் திட்டங்களாக மட்டுமே இருக்கின்றன. அதற்கு அரசு செயல் வடிவம் கொடுக்கவில்லை என்பதே இங்குள்ள தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தினரின் குற்றச்சாட்டு.

'கடந்த பத்து ஆண்டுகளாக தென் மாவட்ட வளர்ச்சிக்காக நாங்கள் முன் வைத்திருக்கும் கோரிக்கைகள் அனைத்தும் கோரிக்கைகளாகவே இருக்கின்றன. ஒரு கோரிக்கை கூட நிறைவேற்றப்படவில்லை," என்கிறார் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் நா. ஜெகதீசன்.

தூத்துக்குடியில் பல ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்ட ஓரிரண்டு கனரகத் தொழிற்சாலைகளை தவிர்த்து வேறு கனரகத் தொழிற்சாலைகளே இந்தப் பகுதியில் இல்லை. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 2013 ம் ஆண்டு அறிவித்த மதுரை - அருப்புக்கோட்டை - தூத்துக்குடி தொழில் பெருவழிச் சாலை திட்டம் ஏழு ஆண்டுகள் கடந்தும் எழுத்தில் மட்டுமே உள்ளது. இதற்காக ஒரு சிறப்பு நோக்க ஊர்தி அமைத்ததோடு சரி, வேறு எந்த முன்னெடுப்பும் எடுக்கப்படவில்லை.

'நில வங்கி உருவாக்கி அருப்புக்கோட்டைக்கும் எட்டயபுரத்திற்கும் இடையில் முதல் கட்டமாக 2000 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி இந்தத் திட்டத்தை தொடங்க முடியும். இங்கிருந்து மதுரை விமான நிலையம் 30 கி.மீ தொலைவிலும், தூத்துக்குடி துறைமுகம் 40 கி.மீ தொலைவிலும் உள்ளதால் தொழிற்சாலைகள் இயங்க ஏதுவாக இருக்கும். பவர் கிரிட் அருகில் இருப்பதால் தடையில்லா மின்சாரம் கிடைக்கச் செய்திட முடியும். ஆனால் நிலத்தடி நீரை காரணம் காட்டி ஆட்சியாளர்கள் இத்திட்டத்தை கிடப்பில் போட்டுள்ளார்கள்," என்கிறார் அவர்.

**மதுரை விமான நிலையத்தின் நிலை**

கடந்த பத்து ஆண்டுகளாக, மதுரை விமான நிலையம் சுங்கவரி விமான நிலையமாக மட்டுமே செயல்படுகிறது. தென் மாவட்டங்கள் வளர்ச்சி காண அதை பன்னாட்டு விமான நிலையமாக்க தரம் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கப்படுகிறது.

மதுரை விமான நிலையம் சுங்கவரி விமான நிலையமாக 2011 ம் ஆண்டு அறிவிக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளாக துபாய், இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு மட்டுமே இந்திய விமானசேவை நிறுவனங்க ளாகிய ஸ்பைஸ் ஜெட் மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் இயக்கப்படுகின்றன.

'பன்னாட்டு விமான நிலையமாக வேண்டுமெனில் மற்ற நாடுகளுடன் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி அந்நாட்டு விமானங்களை மதுரைக்கு இயக்க வழிவகை செய்ய வேண்டும். தற்போது இலங்கையுடன் மட்டுமே இந்த ஒப்பந்தம் உள்ளது. அதுவும் 30 ஆண்டுகளுக்கு முன்னே தற்செயலாக ஏற்படுத்தப்பட்டது. சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற நாடுகளின் விமான சேவை நிறுவனங்கள் அவர்களின் விமானங்களை மதுரைக்கு இயக்கத் தயாராக இருந்தும் மத்திய அரசு அதை அனுமதிக்க மறுக்கிறது," என்கிறார் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் முதுநிலைத் தலைவர் எஸ். ரத்தினவேல்.

தென் தமிழ்நாட்டில் இருந்து செல்லக்கூடிய விரைவில் அழுகக்கூடிய விவசாயப் பொருட்கள் தற்போது திருச்சி, கோவை, கொச்சி விமான நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஏற்றுமதி ஆகின்றன. மதுரை விமான நிலையத்தில் 24 மணி நேர சேவையை அறிமுகப் படுத்தி சரக்கு விமானங்களும் இயக்கப்பட வேண்டும் எனவும் ஓடுதள விரிவாக்கத்திற்காக கையகப்படுத்தப் பட்ட நிலங்களை மாவட்ட நிர்வாகம் இந்திய விமான நிலைய ஆணையத் திடம் ஒப்படைக்கவில்லை என்றும் கூறுகிறார் அவர்.

**என்று துவங்கும் எய்ம்ஸ் பணி?**

மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் நரேந்திர மோடி 2019 ல் நாடாளுமன்ற தேர்தல் வருவதற்கு சில நாட்களுக்கு முன் அடிக்கல் நாட்டினார். இரண்டு ஆண்டுகள் ஆகியும் கட்டுமானப் பணிகள் துவங்கப்படவில்லை. நடக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் இது எதிர்க்கட்சிகளின் பேசு பொருளாகியுள்ளது. (மிகுதி நாளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரப்போகும் மாகாண சபை கடினமானதாகவே இருக்கும்



## சி.வி.கே.சிவஞானம் நேர்காணல்

"வரப்போகும் மாகாண சபை கடினமான ஒன்றாகத்தான் இருக்கும். கடந்த முறை அறுதிப்பெரும்பான்மை ஒன்றை நாம் பெற்றிருந்தும் அது தோல்வியில் முடிவடைந்தது. ஆனால், இனிமேல் வரப்போகும் மாகாண சபை இன்னும் ஆபத்தான தாகத்தான் இருக்கும்" எனக் கூறுகின்றார் வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

நேர்காணல் ஒன்றில் இதனை அவர் தெரிவித்துள்ளார். அவரது நேர்காணலின் விபரம்:

**கேள்வி:** பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருந்த 46 ஆவது ஜெனிவா கூட்டத் தொடர் முடிவுக்கு வந்திருக்கின்றது. உங்களுடைய பார்வையில் இதன் முடிவில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தீர்மானம் தமிழர்களுக்கு வெற்றியா?

**பதில்:** இதனைத் தமிழர்களுக்கு முழுமையான ஒரு வெற்றி என்று சொல்ல முடியாது. இதில் தமிழர்களைப் பொறுத்தவரையில் சாதகமான சில அம்சங்கள் அடங்கியிருக்கின்றது. முக்கியமாக தரவுகளை - ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்கால விசாரணைகளுக்குத் தேவையான சாட்சியங்களை - ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான ஆணை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு இதன் மூலம் வழங்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் அவ்வாறான ஒன்று இருக்கவில்லை. இது முதலாவது.

இரண்டாவதாக, இதுவரை காலமும் 13 ஆவது திருத்தம் - இதனை நாம் எந்தக் காலத்திலும் எமக்கான ஒரு இறுதித் தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவின் அழுத்தம் அல்லது இராஜதந்திர நடவடிக் கையினால் 13 ஆவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதும் ஜெனிவா தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆறு வருடப் போராட்டத்தின் பலனாக 1987 இல் கைச்சாத் திடப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையயின் ஒரு அம்சம்தான் 13 ஆவது திருத்தம். அதன்மூலம் உருவாக்கப்பட்டதுதான் மாகாண சபை. அதற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சாதகமான விடயங்கள் இதில் உள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கை யைக் கொண்டு செல்வது என்ற விடயம் எம்மால் பேசப்பட்டது. அந்த விடயம் தீர்மானத்தில் உள்ள டக்கப்படவில்லை என்பது ஒரு முக்கியமான குறைபாடுதான். ஆனால், சேகரிக்கப்படும் தகவல்கள் ஆதாரங்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம். இதில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் ஆறு மாதங்களுறுறுக்கு ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதில் இடம்பெறக் கூடிய முன்னேற்றங்களைப் பொறுத்து எதிர்காலத்தில் சர்வதேச நீதிமன்றத்தை நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம்.

ஆக, இதில் எமக்கு சாதகமான சில விடயங்கள் உள்ளன. அதனால், இது வெற்றியா தோல்வியா என திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது.

**கேள்வி:** பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து பொதுவான கோரிக்கை ஒன்றை இம்முறை முன்வைத்திருந்த போதிலும், அதன்மூலம் எதுவும் சாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதில் தமிழ்க் கட்சிகள் எங்கே தவறியுள்ளன?

**பதில்:** இந்த விடயத்தைப் பொறுத்த வரையில் எமது எல்லைகளை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் எல்லைகள் உள்ளன. விருப்பங்கள், இலக்குகள், இலட்சியங்கள் இருக்கலாம். ஆனால், அவை எந்த வகையில் அடைந்துகொள்ளக் கூடியவை என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதில் இருக்கக்கூடிய மட்டுப்பாடுகளைப் புரிந்துகொண்டுதான் நாம் செயற்பட வேண்டும்.

சர்வதேச அரங்கில் எமது பிரச்சினையைத் தொடர்ந்தும் வைத்திருக்கக்கூடிய வகையிலான தீர்மானம்தான் இது. அதற்கான சாதக நிலை உள்ளது. ஆனால், நாம் எதிர்பார்த்த சர்வதேச விசாரணை என்பது பிரேரணையில் இல்லை என்பதற்காக நாம் தோற்றுவிட்டோம் அல்லது கூட்டாகச் செயற்படுவதில் பின்னடைவைச் சந்தித்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் இது போன்ற விடயங்கள் படிமுறையில்தான் வரவேண்டும். அவ்வாறு அது அடுத்த அடுத்த கட்டப் படிமுறைகளில் வரக்கூடும்.

**கேள்வி:** சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்த கோரிக்கை இம்முறையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதற்கான சாத்தியங்கள் எதிர்காலத்திலாவது உள்ளதா?

**பதில்:** நிச்சயமாக உள்ளது. ஏனெனில், மனித உரிமைகள் ஆணையாளரின் ஆரம்ப அறிக்கையிலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்து பேசப்பட்டுள்ளது. அதனால், அது தொடர்ந்தும் பேசப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. இலங்கை அரசாங்கம் எந்தளவுக்கு எந்தளவு எதிர்மறையான நிலைப்பாட்டை எடுத்துச் செயற்படுகின்றதோ அந்தளவுக்கு இந்தப் பிரச்சினை சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்வத்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும்.

**கேள்வி:** 13 ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து இம்முறைதான் ஜெனிவா தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது குறித்து உங்கள் பார்வை என்ன? இதனை நீங்கள் வரவேற்கின்றீர்களா? அல்லது இதற்கு மேலாகச் செல்ல வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்களா?

**பதில்:** 13 ஆவது திருத்தத்தையும், மாகாண சபைத் திட்டத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தியல்தான் இங்கு இப்போது உள்ளது. 13 ஆவது திருத்தம்தான் தீர்வு என நாமும் சொல்லவில்லை போராட்ட அமைப்புக்களும் சொல்லவில்லை. ஆனால், எமக்கான ஒரு கட்டமைப்பு இருக்க வேண்டும். நாம் கூட்டாகக் குரல் கொடுப்பதற்கான ஒரு கட்டமைப்பு அவசியம். அந்த வகையில், இது முக்கியமான ஒரு விடயம்தான்.

**கேள்வி:** 10 தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து ஒரு புதிய கூட்டணியை உருவாக்குவதில் உங்களுடைய பங்களிப்பும் பிரதானமாக இருந்தது. அந்தக் கூட்டணியின் தற்போதைய நிலை என்ன? அதன் எதிர்காலம் என்ன?

**பதில்:** 10 கட்சிகளின் கூட்டமைப்பை உருவாக்குவதில் நான் அதிகளவு பங்களிப்பைச் செய்தது உண்மைதான். தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதை முன்னிட்டே இவ்வாறு 10 கட்சிகள் இணைந்து செயற்படத் தொடங்கின. இங்கு என்னுடைய அலுவலகத்தில்தான் சந்தித்து ஜனாதிபதிக்கான கடிதம் ஒன்றையும் அனுப்பினோம். அதற்குப் பின்னர் சில கருத்து முரண்பாடுகள் அல்லது சில தவறான புரிதல்களின் அடிப்படையில் இது ஸ்தம்பிதமான ஒரு நிலையில் இருக்கின்றது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஒரு அமைப்புக்கான தேவை இருக்கின்றது.

ஆனால், தற்போதுள்ள கள நிலைமையைப் பார்க்கும் போது கலந்துரையாடல்களின் அடிப்படையில் எம்மிடையே இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, இந்த கூட்டணியைப் பலப்படுத்தாவிட்டால் தேசியக் கட்சிகள் இங்கு பலப்படும். தேசியக் கட்சிகள் இங்கு வெற்றிபெறப் போவதில்லை என்றெல்லாம் சொல்வது கற்பனை வாதம். இன்று யதார்த்தம் மாறிவிட்டது.

தேர்தலை இலக்காகக் கொண்டதாக இந்தக் கூட் டணி இருக்கக்கூடாது. இதனை நாங்கள் அப்போதே சொல்லியிருந்தோம். கொள்கை அடிப்படையிலான தாக இது இருப்பது அவசியம். அவ்வாறான ஒரு கூட்டணி தேவை என நான் இப்போதும் நினைக் கிறேன். ஆனால், இதனை முன்னெடுப்பதற்கான தேவை உள்ளது. மாவை சேனாதிராஜாவைப் பொறுத்தவரை யில் இவ்விடயத்தில் ஏதோ ஒரு குழப்பத்தில் இருப்ப தாகவே தெரிகின்றது. உட்கட்சிப் பிரச்சினைளும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால், ஒற்றுமை ஒன்றுக்கான தேவை இருப்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எல்லோரும் இங் கிருந்து சென்றவர்கள்தானே. சென்றவர்கள் என்பதை விட அவர்களைப் போகப்பண்ணிய செயற்பாடுகளும் நடந்தது. போகப்பண்ணினது இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. நான் கூட போகலாம். அப்படியான நிலை உள்ளது. அனைவரும் இணைந்து ஒரு அணியாகச் செல்லா விட்டால் தேசியம் தேய்ந்துவிடலாம்.

**கேள்வி:** மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விரை வில் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை எதிர்கொள்வதற்கான உங்களுடைய உபாயம் என்ன?

**பதில்:** தமிழத் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில், இவ்விடயம் தொடர்பில் ஆற அமர இருந்து சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கினம். இது தொடர்பில் நாம் கலந்துபேச வேண்டும். முக்கியமாக கூட்டமைப்பு என்பது 3 கட்சி களை உள்ளடக்கியது. தமிழரசுக் கட்சியின் ஏக போக மான அமைப்பு அல்ல. இவ்வாறான குற்றச் சாட்டை பார்க்க முடிகின்றது. ரெலோ போன்றவை தமிழரசுக் கட்சியை கடுமையாக விமர்சிக்கின்றன. இவ்வாறான நிலை எமக்கு பாதகமாக அமையலாம். இவ்விடயத்தில் எவ்வாறு செயற்படுவது என்பதற்கான ஒரு தந்திரோ பாயத்தை நாம் இன்னும் வகுத்துக்கொள்ளவில்லை.

வரப்போகும் மாகாண சபை கடினமான ஒன்றாகத் தான் இருக்கும். கடந்த முறை அறுதிப்பெரும்பான்மை ஒன்றை நாம் பெற்றிருந்தும் அது தோல்வியில் முடி வடைந்தது. ஆனால், இனிமேல் வரப்போகும் மாகாண சபை இன்னும் ஆபத்தானதாகத்தான் இருக்கும். மாகாண சபைப் பதவி என்பது கௌரவமான ஒரு பதவியல்ல. அல்லது உழைத்துவிட்டுச் செல்லும் ஒரு பதவியல்ல. அதற்கு நிர்வாகம், நிதி, சட்டம் போன்ற விடயங்களைக் கையாளக்கூடியவர்களே அதற்கு வரவேண்டும். குறைந்த பட்சம் நிர்வாகப் பதவிகளுக்கு வருபவர்களாவது அதனைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறானவர்கள் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை.

இது தொடர்பாக நாம் கலந்துபேச வேண்டும். எம்மிடையே இருக்கக்கூடிய முரண்பாடுகள் எதிரிக்குத்தான் சாதகமாக அயைகக்கூடும்.

**கேள்வி:** வடமாகாண சபையின் அவைத் தலைவர் என்ற முறையில், கடந்த வடமாகாண சபை மக்களின் எதிர்பார்ப்புக்களை எந்தளவுக்கு நிறைவேற்றியுள்ளது. அது குறித்த உங்களுடைய பார்வை என்ன?

**பதில்:** மக்களுடைய சில விஷயங்களில் கூட்டாக இருந்து நாம் குரல் கொடுத்துள்ளோம். குறிப்பாக இனப் படுகொலை போன்ற விடயங்களில் தெளிவான முறை யில் தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம். அரசியல மைப்பு விடயத்திலும் முன்னேற்றகரமான அரசியல மைப்பு ஒன்றை நாம் முன்மொழிந்திருக்கின்றோம். இவ்வாறு பல விடயங்களை நாம் சாதித்திருக்கின்றோம்.

ஆனால், மக்களுடைய தேவைகளைப் பொறுத்த வரையில் அவற்றை நாம் முழுமையாகப் பூர்த்திசெய்ய வில்லை. இதற்கு காரணங்களைச் சொல்லலாம். அதனை ஏற்கமுடியது. சில விடயங்களை நாம் செய் திருக்க முடியும். குறிப்பா 80,000 வரையிலான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. விவசாயம், மீன்பிடி போன்ற விடயங்கள் கையாளப்படவில்லை. பதவிக்காலத்தில் அரைவாசிப் பகுதியிலேயே மாகாண சபைகளுக்குள் குழப்பங்கள் வந்துவிட்டன. இவற்றை நாம் செய்திருக்கவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**30-B**

**2010 12**

**02C** .இலக்கணத்திற்கு அமைவான சரியான தமிழ் வாக்கியத்-தினை தெரிவு செய்தல்.

இக் கலந்துரையாடலின் சரியான வடிவம்

**A ).** ஆ! மிகவும் அழகான சட்டை

**C)** உண்மையா ! இது புதியது ஒன்றல்ல


**E ).** ஆனாலும் இது மிகவும் அழகானது.

**D ).** நீர் இதனை விரும்புகிறீரா?


**B ).** ஆம் எனக்கு மிகவும் விருப்பம்

எனவே சரியான விடை **01 ACEDB**


**2010 12**




இவ் வினாவில் உள்ள கோலத்திற்கேற்ப
**7-4 =3 இனி 3x2=6**




இவ் வினாவில் உள்ள கோலத்திற்கேற்ப
**4-2 =2 இனி 2x5=10**




............

இவ் வினாவில் உள்ள கோலத்திற்கேற்ப
**5-3 =2 இனி 2x4=8**
எனவே சரியான விடை 01

**2012 09**

| | | |
|---|---|---|
| காய்கறி | பழம் | A |
| B | மாம்பழம் | அரிசி |
| பாகற்காய் | வாழைப்பழம் | பயறு |

அரிசி பயறு என்பன தானியம் ஆகும்.எனவே **A** எனபது தான-ியம் ஆகும்
**B** எனபது மரக்கறி ஆகும்.தரவில் அது கரட் ஆகும்.

**2012 09**

| | | |
|---|---|---|
| A | கப்பல் | ஆகாயவிமானம் |
| குதிரை | திமிங்கிலம் | B |

இவ் வினாவில் உள்ள கோலத்திற்கேற்ப
கப்பல் ஆகாயவிமானம் என்பன போக்குவரத்துக்குரியவை. ஆகும்.எனவே **A** எனபது வண்டி ஆகும்.

கப்பல் திமிங்கிலம் நீருக்குரியவை.ஆகாயவிமானம் பருந்து எனபன காற்றுக்குரியவ்குரியவை. ஆகும்.எனவே **B** எனபது வண்டி ஆகும்.

எனவே சரியான விடை 01

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# இலங்கைக் கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதி!

## நாட்டுப்படகுகளை மட்டும் அனுமதிக்க யோசனை என்கிறார் மீன்பிடி அமைச்சர்



**கொழும்பு, ஏப்.01**

**இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களை அனுமதிப்பதற்கான யோசனையொன்றை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியாவிடம் முன்வைத்துள்ளார்.**

சில கட்டுப்பாடுகளின் கீழ் இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்து, கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அனுமதி பத்திர நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி, அதனூடாக இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்க தான் யோசனை முன்வைத்ததாகவும் அவர் கூறுயிருக்கிறார்.

இந்த அனுமதி பத்திர நடைமுறையானது, நாட்டு படகுகளுக்கு மாத்திரமே செலுப்படியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போட்டம் ட்ரோலரிங் படகுகளுக்கு இந்த அனுமதி பத்திர நடைமுறை செலுப்படியாகாது.

இதைத் தவிர மேலும் பல யோசனைகள் உள்ளன. அவற்றில் இந்த அனுமதி பத்திர நடைமுறை ஒரு யோசனை. இந்த யோசனையின் கீழ், இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் மாத்திரமே இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்க யோசித்துள்ளோம்.

இந்த அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு, இலங்கை அரசாங்கத்திற்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

இந்திய மற்றும் இலங்கை கடற்படைகளின் முழுமையான கட்டுப்பாடுகளின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்க யோசனையை முன்வைத்துள்ளோம்.

நாட்டு படகுகளில் மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

'நாட்டு படகுகளின் தடை செய்யப்பட்ட விதிமுறைகளின் கீழ் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படாது. அதேவேளை, பாட்டம் ட்ராலிங் மீன்பிடி நடவடிக்கை முழுமையாக தடை செய்யப்பட வேண்டும்.

இலங்கை மீனவர்கள் எந்த வகையிலும் பாதிக்காத வகையிலேயே இந்த திட்டத்தை முன்னெடுக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய மீனவப் பிரச்னை தொடர்பில், இலங்கை அரசாங்கம், தொடர்ச்சியாக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. பேச்சுவார்த்தைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன'. என்றார்.

# உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்களுக்கு பாதுகாப்பு!

கொழும்பு, ஏப்.01

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு இலங்கையில் உள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களின் பாதுகாப்பையும் பலப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், இவ்வாறு பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 263 பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில், ஒவ்வொரு தேவாலயத்துக்கும் பொறுப்பான மதகுருவுடன் கலந்துரையாடி, பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தின வணக்க வழிபாடுகளைத் தடைகள் இன்றி நிறைவேற்ற அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# மட்டு. ஜனநாயகப் போராளிகளை சந்தித்தார் தமிழரசுத் தலைவர்!

மட்டக்களப்பு, ஏப்.01

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி அலுவலகத்தில் கட்சியின் உபதலைவர் நகுலேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டு அம்பாறை ஊடகப் பேச்சாளர் சாந்தன் உட்பட கட்சியின் மட்டக்களப்பு நிருவாகிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்வரும் தேர்தலை முகங்கொடுத்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ச்சியாக இணைந்து செயற்படுதல், ஐ.நா வில் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்தான தீர்மானம், முன்னாள் போராளிகளின் அரசியற் செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியாவில் தந்தை செல்வா ஜனனதினம்

வவுனியா, ஏப்.01

வவுனியாவில் தந்தை செல்வாவின் 123ஆவது ஜனனதின நிகழ்வு வவுனியா மணிக்கூட்டுக் கோபுரசந்திக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. (எ)

## குற்றவாளிகளிடம் நீதி பொறிமுறை: சர்வதேசத்தை சாடும் உறவினர்கள்!

வவுனியா, ஏப்ரல் 01

குற்றம் புரிந்த குற்றவாளிகளிடமே நீதியை வழங்கும் பொறி முறையை சர்வதேசம் வழங்கியுள்ளமை கவலையளிக்கின்றது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனியா பழையபேருந்து நிலையத்துக்கு முன்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

நாம் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனால், ஆட்சி பீடம் ஏறிய எந்த அரசாங்கமும் இதுவரை எமக்கு நீதியை வழங்கவில்லை.

மேலும் குற்றம் புரிந்த குற்றவாளிகளிடம் நீதி கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில், இலங்கையிடம் நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை சர்வதேசம் வழங்கியமை வேதனையளிக்கின்றது - என உறவினர் ஒருவர் குறிப்பிட்டார். (எ)

# கைதிகள் விடுதலை அறிக்கையில் அரசியல் கைதிகள் இல்லை!

*நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு*



கொழும்பு, ஏப்.01

**சிறைக்கைதிகளை பொது மன்னிப்பு அளிக்கும் கொள் கைத்திட்ட செயல்பாட்டுக் குழு அறிக்கையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் விடயம் உள்வாங்கப்பட வில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் கைதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், அங்கு நிலவிவரும் நெருக்கடித்தன்மையை குறைத்துக்கொள்வதற்காக விஷேட பொறிமுறையின் ஊடாக பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கான வேலைத்திட்டமொன்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சராகவிருந்த வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே பதவிக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.எம். என்.சி. தனசிங்கவை தலைவராகக் கொண்ட குழுவினரால் ஆராயப்பட்டு வகுக்கப்பட்ட கொள்கைத் திட்ட அறிக்கை, நீதி அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

இராஜகிரியவிலுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி:

சிறைச்சாலைகளில் கைதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், சிறைக்கைதிகளும் மனிதர்களே என்ற கோட்பாட்டின்படி அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டும்.

அவர்கள் சமூகத்தினரால் ஒதுக்கப்படாது சமூகத்தினருடன் ஒன்றிணைந்து வாழ்வதை விரும்புகிறார்கள். விடுவிக்கப்பட்டவர்கள் சமூகத்துக்குள் விமர்சிக்கப்படாதிருக்க வேண்டும் - என்றார்.

இந்தக் கொள்கைத் திட்டத்தின் ஊடாக அரசியல் கைதிகள் விடுக்கப்படுவார்களா? என வினவியபோது - இல்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படமாட்டார்கள்.

இந்தக் குழுவினரால் ஆராயப்பட்டு வகுக்கப்பட்ட கொள்கைத் திட்ட அறிக்கையில் அரசியல் கைதிகளை விடுவிக்கும் திட்டம் இல்லை.

அரசியல் கைதிகளுடன், தீவிரவாதம், பாலியல் துஷ்பிரயோகம், போதைப்பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களைப் புரிந்த சிறைக்கைதிகள் இந்த பொது மன்னிப்பு கொள்கைத் திட்ட செயல்திட்ட அறிக்கையில் உள்வாங்கப்படவில்லை.

சிறு சிறு குற்றங்களைப் புரிந்தவர்கள், நீண்ட காலமாக சிறைவாசம் அனுபவிப்பர்களை விடுதலை செய்வதற்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை பரிந்துரைகளை அமைச்சரவை அங்கீகாரம் பெற்றதும் செயல்படுத்த எண்ணியுள்ளோம். அதன்படி, தமிழ் - சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட 8000 சிறைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் - என்றார். (எ)

## பல்கலை. பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் ரூ. 50 மில்லியன் நிதி மோசடி அம்பலம்

### கோப் குழு கண்டறிவு: அதிகாரி இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப்.01

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் பேணப்பட்டு வந்த நிலையான வைப்புக் கணக்குகளில் 50 மில்லியன் ரூபா நிதி, முன்னாள் சிரேஷ்ட அதிகாரி ஒருவரால் மோசடியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) புலப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் மக்கள் வங்கியின் பேராதனைக் கிளையில் பேணப்பட்டு வந்த 14 நிலையான வைப்புக்கள் 2006ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2016 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மூடப்பட்டு பெறப்பட்ட 93 மில்லியன் ரூபாவில், 37 மில்லியன் ரூபா மாத்திரம் மீண்டும் நிலையான வைப்பில் இடப்பட்டிருப்பதுடன், எஞ்சிய 50 மில்லியன் ரூபா சிரேஷ்ட உதவி நிதி அதிகாரியால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி மோசடியுடன் தொடர்புபட்ட அதிகாரி பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டி ருப்பதுடன், இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பல்கலைக்கழகத்தில் இந்த மோசடியுடன் தொடர்புபட்ட நபர்கள் குறித்து ஆராய்வதற்கு பேராதனைப் பல்கலைக்கழக மூதவையால் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதற்கு மேலதிகமாக கணக்காய்வாளர் திணைக்களத்தால் தண்டக் கட்டணம் அறவிடப்பட்டிருப்பதாக பாராளுமன்றத்தில் கூடிய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் மேலும் தெரியப்படுத்தப்பட்டது. (எ)

## மோட்டார் சைக்கிள் விபத்துக்களை குறைப்பதற்கு சிறப்பு நடவடிக்கை



கொழும்பு, ஏப்.01

மோட்டார் சைக்கிள் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக போக்குவரத்து பொலிஸாரால் நான்கு நாள் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 6 மணிக்கு ஆரம்பமான இந்த சிறப்பு நடவடிக்கை ஏப்ரல் 3 ஆம் திகதி முடிவடையும் என்றும் அவர் கூறினார்.

இந்தக் காலகட்டத்தில், மோட்டார் சைக்கிள் சாரதிகள் குறித்து கவனம் செலுத்த போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 8.3 மில்லியனாகும், அதில் 56 சதவீதம் மோட்டார் சைக்கிள்களாகும், எனவே மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த 24 மணிநேரத்தில் பதிவான வீதி விபத்துக்களால் மொத்தம் எட்டுப் பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

## கனடாவில் வேலைவாய்ப்பு எனக்கூறி பண மோசடியில் ஈடுபட்டவர் கைது!

கொழும்பு, ஏப்ரல் 01

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பல்வேறு நபர்களிடம் பண மோசடியில் ஈடுபட்ட ஒருவரை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்தனர்.

குறித்த நபர் பாணந்துறை பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் பல வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி வந்ததுடன், கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பல நபர்களிடம் 30 இலட்சத்துக்கும் அதிகமான பணம் வசூலித்துள்ளார்.

பண வசூலிப்பின் பின்னர் சந்தேக நபர் தலைமறைவான நிலையில், பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

29 வயது அட்டலுகம பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

## 300 கிலோ ஹெரோயின், துப்பாக்கிகளுடன் இலங்கைப் படகு இந்தியாவில் பறிமுதல்!

திருவனந்தபுரம், ஏப்.01

இந்தியக் கடற்பரப்பில் 300 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் பெருந்தொகை ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி ரவைகளுடன் இலங்கைப் படகு ஒன்று கைப்பற்றப்பட்டதுடன், ஆறு இலங்கைப் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டனர்.

“ரவிஹான்சி” என்ற இலங்கை மீன்பிடிக் கப்பல், இந்தியக் கடலோரக் காவல்படையினரால் கேரளாவின் திருவனந்தபுரம் கடற்பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் படகு திருவானந்தபுரம் மீன்பிடித் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு சென்னை போதைப் பொருள் கட்டுப்பாட்டு பணியகம் படகை தடுப்புக் காவலில் எடுத்தது.

இந்தப் படகில் 300.3 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஐந்து ஏ.கே.-47 ரக துப்பாக்கிகள் மற்றும் 9 மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள் ஆயிரம் மற்றும் பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன.

போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள், ஈரானின் சபாஹர் துறைமுகத்திலிருந்து படகு மூலம் ரவிஹான்சி என்ற இலங்கை படகிடம் பறிமாற்றம் செய்யப்பட்டன என ஆரம்ப கட்ட விசாரணைகளில் வெளி வந்தது.

இதேவேளை, கைதானவர்கள் எல்.ஒய் நந்தனா, எச்.கே. ஜி.பி. தஸ்பிரியா, ஏ.எச்.எஸ் குணசேகர, எஸ்.ஏ.செனரத், டி ரணசிங்க, மற்றும் டி நிசங்கா என அடையாளம் காணப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐரோப்பிய கோடீஸ்வரர் ஹெலி விபத்தில் மரணம்

சன்பிரான்சிஸ்கோ, ஏப். 01

அமெரிக்காவின் அலாஸ்காவில் நேர்ந்த ஹெலிகொப்டர் விபத்தில் ஐரோப்பிய கோடீஸ்வரர்களில் ஒருவரான பீற்றர் கெலினர் உட்பட ஐவர் பலியாகினர்.

ஹெலி - ஸ்கைய்ங் எனப்படும் பனிச்சறுக்கில் பங்கேற்க இவர்கள் அனைவரும் ஹெலிகொப்டரில் பயணித்தபோது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தனர்.

அலாஸ்கா மீட்புக் குழுவினர் இறந்தவர்களின் உடல்களை மீட்டுள்ளனர்.

ஹெலிகொப்டர் விபத்துக்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. எனினும், 5 ஆயிரத்து 500 அடி உயரத்திலிருந்து ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொங்கியது.

உயிரிழந்த கெலினர் அடிக்கடி மலைச்சறுக்கு பயணங்களில் ஈடுபடுவது வழமை. செக் குடியரசை சேர்ந்த கெலினர் 1750 கோடி டொலர் சொத்துக்களுக்கும் 5000 கோடி பெறுமதியான நிறுவனங்களுக்கும் சொந்தக்கார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா வைரஸ் தோற்றம்: மேலதிக விசாரணை அவசியம்!

ஜெனிவா, ஏப். 01

கொரோனா வைரஸ் ஆய்வு கூடத்திலிருந்து வெளிவந்தது என்பதை உறுதியாக நிராகரிக்க மேலதிக விசாரணை தேவை என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனோம் கெப்ரேயஸ் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

“கொரோனா பரவலுக்கு ஓர் ஆய்வக கசிவு மிகக் குறைவான காரணமே. எனினும் இதை உறுதிப்படுத்த அதிக ஆய்வு தேவை. இது தொடர்பில் நிபுணர் குழுவின் அறிக்கை முக்கியமான தொடக்கமே. ஆனால், இது முடிவல்ல. கொரோனா வைரஸ் எங்கிருந்து உருவாகியது என்பது கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் எந்தவொரு சிறு தகவலையும் விட்டு வைக்கமால் அறிவியலை பின்பற்றி விடை தேடவேண்டும்.

“வுஹான் ஆய்வகத்துக்கு நிபுணர் குழு சென்று ஆய்வு மேற்கொண்டது. இதன்போது கொரோனா பரவல் தொடர்பான தரவுகளை ஆய்வு செய்வதில் தங்களுக்கு சிரமம் இருந்ததாக குழுவினர் தெரிவித்தனர். போதுமான தரவுகளை வழங்க சீனா தவறிவிட்டது. எதிர்காலத்தில் இது தொடர்பாக நடத்தும் ஆய்வுகளில் உரிய காலத்தில் விரிவான முறையில் சீனா தரவுகளை பகிர வேண்டும்.

“ஆய்வகத்தில் இருந்து வைரஸ் கசிந்திருக்கலாம் என்பதை சிறப்பு நிபுணர்கள் அடங்கிய தகுதி வாய்ந்த குழுக்கள் மூலம் விசாரணை நடத்த வேண்டியுள்ளது. அந்தக் குழுக்களை நியமிக்க உலக சுகாதார ஸ்தாபனம் தயார்.

“கொரோனா வைரஸின் பிறப்பை கண்டறிய சில காலம் ஆகும். வைரஸ் எங்கு உருவானது என்பதை கண்டறிந்து உலகுக்குக் கூற உலக சுகாதார ஸ்தாபனம் கடமைப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழாமல் நடவடிக்கை எடுக்க முடியும். ஒரே ஒருமுறை மேற்கொள்ளப்பட்ட எந்த ஆய்வும் அனைத்துப் பதில்களையும் தராது.




“வுஹான் மாமிச உணவு சந்தையின் பங்கு குறித்து தெளிவின்மை நீடிக்கிறது. ஆனால், அந்த சந்தையில் வைரஸ் பரவலுடன் சுகாதார சீர்கேடு நிலவியதை நிபுணர் குழு உறுதி செய்துள்ளது. இது தொடர்பில் மேலும் பல ஆய்வுகள் அவசியம்” - என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக சுகாதார நிறுவனத்தின் புதிய அறிக்கைக்கு சீனா பதிலளிக்கவில்லை. (ஐ)

# அமெரிக்காவை உலுப்பிய கொலை வழக்கு விசாரணை ஆரம்பமாகியது!

நியூயோர்க், ஏப். 01

அமெரிக்காவை உலுக்கிய கறுப்பினத்தவரான ஜோர்ஜ் பிலொய்ட்டை கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் மீதான வழக்கு விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

மினியாபொலிஸ் நகரில் இடம்பெறும் இந்த வழக்கு, தொடர்ந்து ஒரு மாதம் வரை நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு மே 25ஆம் திகதி 10 டொலர் போலி நாணயத்தாளை கொடுத்து சிகரெட் வாங்க முயன்றமைக்காக பிலொய்ட்டை பொலிஸார் கைது செய்ய முயன்றனர். அப்போது பொலிஸ்காரரான டெரிக் சாவின் தனது முழங்காலால் அவரின் கழுத்தில் அழுத்தினார். இதனால், மூச்சு விட முடியாமல் திணறிய பிலொய்ட் உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பான காணொலி உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் போராட்டங்கள் பரவி உலகம் முழுவதும் இடம்பெற்றன.

பிலொய்ட்டின் கழுத்தை டெரிக் சாவின் முழங்காலால் அழுத்திப் பிடிக்கும் 9 நிமிடங்கள் கொண்ட காணொலியை நீதிமன்றில் சமர்ப்பித்த பிலொய்ட் சார்பு வழக்கறிஞர் இதனை ஒரு கொலை என்று வாதிட்டார்.

டெரிக் சாவின் தரப்பு வழக்கறிஞர் இது ஒரு கொலை அல்ல என்று வாதிட்டனர். அத்துடன், பிலொய்ட்டின் மரணத்துக்கு போதை மருந்துகளே காரணம் என்றும். அவர் மூச்சு திணறலால் உயிரிழக்கவில்லை என்றும், பொலிஸ் பயிற்சியில் குற்றவாளிகளை எவ்வாறு அணுகுவது என வழங்கப்பட்ட பயிற்சியின் பிரகாரமே டெரிக் சாவின் செயற்பட்டார் என்பதை நிரூபிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் டெரிக் சாவினுக்கு 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)



# விலங்குகளுக்கு தடுப்பூசி ரஷ்யா உருவாக்கியது!

மொஸ்கோ, ஏப். 01

விலங்குகளுக்கான உலகின் முதல் கொரோனா வைரஸ் தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்யா நேற்று அறிவித்துள்ளது.

கோர்னிவக்-கோவ் என்று பெயரிடப்பட்ட புதிய தடுப்பூசி, விலங்குகளின் ஆரோக்கியத்திற்கான பெடரல் மையத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆரம்பகட்ட சோதனைகளின் போது இது எந்த பக்க விளைவுகளையும் காட்டவில்லை.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் தொடங்கிய கோர்னிவக்-கோவ் மருத்துவ பரிசோதனைகளில் நாய்கள், பூனைகள், ஆர்க்டிக் நரிகள், மிங்க், நரிகள் மற்றும் பிற விலங்குகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

சோதனைகளின் முடிவின்படி தடுப்பூசி பாதிப்பில்லாதது என்ற முடிவுக்கு வர உதவியதுடன் விலங்குகள் மற்றும் அதிக நோயெதிர்ப்பு செயல்பாடுகளைக் வெளிக்காட்டியுள்ளன.

கிறீஸ், அவுஸ்திரேலியா, போலந்து, கனடா, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் ஏற்கனவே கோர்னிவக்-கோவ் தடுப்பூசியை வாங்குவதில் ஆர்வம் காட்டியுள்ளன.

இதனால் ஏப்ரல் மாதத்தில் தடுப்பூசிகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படலாம் என்று ரஷ்யாவின் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (ஐ)

### தன்சானிய ஜனாதிபதியின்

# இறுதிச்சடங்கு நெரிசலில் சிக்கி 45 பேர் உயிரிழப்பு!

டோடோமோ, ஏப். 01

தன்சானியா நாட்டின் ஜனாதிபதி ஜோன் மெகுபுலியின் இறுதிச்சடங்கில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 45 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து பொலிஸ் மா அதிபர் லஸாரோ மாம்பொசாசா கூறியதாவது:

“பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அவரது உடல் உஹூரு மைதானத்தில் கடந்த வாரம் வைக்கப்பட்டது. அப்போது அவரின் உடலைப் பார்ப்பதற்காக அந்த மைதானத்தின் சுவரில்

பலர் ஏறியபோது அது இடிந்து விழுந்தது. அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 45 பேர் உயிரிழந்தனர் என்றார் அவர்.

கடந்த 2015 முதல் தன்சானியா நாட்டின் ஜனாதிபதியாக மெகுபுலி பொறுப்பு வகித்து வந்தார். அண்மையில் உடல்நலன் பாதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த 17ஆம் திகதி காலமானார். (ஐ)

# சீனாவுக்கு விசுவாசமானோரின் கையிலேயே இனி ஹொங்கொங்!

ஹொங்கொங், ஏப். 01

சீனாவுக்கு விசுவாசமானவர்கள் மட்டுமே ஹொங்கொங் பேரவை தேர்தலில் பங்கேற்கவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கவும் வகை செய்யும் சர்ச்சைக்குரிய திருத்தத்தை சீனா நேற்று முன்தினம் சட்டமாக நிறைவேற்றியது.

இதுகுறித்து அசோசியேடட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தவை வருமாறு:

சீன பாராளுமன்றத்தில் கடந்த 11ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட, சர்ச்சைக்குரிய ஹொங்கொங் தேர்தல் சீர்திருத்தம் செவ்வாய்க்கிழமை சட்டமானது.

இதுதொடர்பாக நடைபெற்ற பாராளுமன்ற நிலைக் குழுவின் 2 நாள் கூட்டத்துக்குப் பிறகு, 167 உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழு சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டது. இதையடுத்து, ஜனாதிபதி ஷி ஜின்பிங் சட்டத் திருத்தத்தில் கையெழுத்திட்டார். இதனைத் தொடர்ந்து, அது சட்டமாக்கப்பட்டது.

புதிய சட்டத்தின்படி, ஹொங்கொங் பேரவையில் இதுவரை 70 உறுப்பினர்களாக இருந்த மொத்த இடங்கள் 90 -ஆக அதிகரிக்கப்படுகிறது. இதே நேரம், மக்களால் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த எண்ணிக்கை 35ஆக இருந்தது. அந்த வகையில், முன்னர் 50 சதவீதமாக இருந்த மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை சுமார் 22 சதவீதமாகியிருக்கிறது.

பேரவையில் ஜனநாயக ஆதரவாளர்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும் நோக்கத்துடன் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அத்துடன், பேரவை உறுப்பினராக விரும்புவர்களை சீனாவுக்கு ஆதரவான தேர்தல் குழு சீராய்வு செய்து, தகுதியில்லாதவர்களை நிராகரிக்கும் முறையும் புதிய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியாமி ஓப்பன் ரென்னிஸ் பார்டி அரையிறுதியில்!

மியாமி, ஏப். 01

மியாமி ஓப்பன் ரெனிஸ் போட்டியில், பிரபல வீராங்கனையான சபலென்காவை போராடி வீழ்த்தி ஆஷ்லே பார்டி அரையிறுதி போட்டிக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் போட்டியான மியாமி ஓப்பன் கடந்த 22ஆம் திகதி ஆரம்பமானது. இந்தத் தொடர் தற்போது காலிறுதி ஆட்டத்தை எட்டியுள்ளது.

முதலாவது காலிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி, பெலாரஸின் சபலென்கா ஆகியோர் மோதினர்.

கடும் போட்டியாக நீடித்த இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 6 - 4 என்ற கணக்கில் ஆஷ்லே பார்டி வென்றார். அடுத்த செற்றை 6 - 7 என்ற கணக்கில் சபலென்கா வெற்றி பெற்றார்.

வெற்றி - தோல்வியை தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றில் 6 -3 என்ற கணக்கில் பார்டி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடக்கும் அரையிறுதி ஆட்டத்தில் உக்ரைன் நாட்டை சேர்ந்த எலினா ஸ்விரோலினாவை எதிர்கொள்ளவுள்ளார்.

(ஐ)





# மேற்கிந்தியத்தீவு அபாரம்! சவால் விடுக்கும் இலங்கை!!

அன்டிகுவா, ஏப். 01

மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் பிராத்வெயிட்டின் சிறப்பான சதத்தால் அந்த அணி 354 ஓட்டங்களை எடுத்துள்ளது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி சவால் விடுக்கக்கூடிய வகையில் துடுப்பெடுத்தாடி வருகின்றது. நேற்று முன்தினம் ஆட்டம் முடிவின்போது அந்த அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 136 ஓட்டங்களை எடுத்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இலங்கை அணி அங்கு தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்த நிலையில் தொடர் வெற்றியை தீர்மானிக்கும் இரண்டாவது டெஸ்ட் கடந்த மார்ச் 29ஆம் திகதி ஆரம்பமானது.

முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 287 ஓட்டங்களை எடுத்த நிலையில்முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அப்போது பிராத் வெயிட் 99, கோன்வோல் 43 ஓட்டங்களுடன் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது அவர்கள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். இருவரும் சிறப்பாக இலங்கையின் பந்துகளை கையாண்டனர். 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 73 ஓட்டங்களை எடுத்து கோன்வோல் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து சதம் கடந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிராத்வெயிட் 311 பந்துகளை சந்தித்து 13 பௌண்ட்ரிகளை அடித்து 126 ஓட்டங்களை குவித்தார்.

இதனால், 354 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

இலங்கையின் பந்து வீச்சில் சுரங்க லக்மால் 4, துஷ்மந்த சாமீர 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி. தொடக்க வீரராக களமிறங்கிய அணித் தலைவர் கருணாரத்ன ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ஆனால், மறுமுனையில் தொடக்கம் கொடுத்த திரிமன்னே சிறப்பாக ஆடினார்.

ஒஷத பெர்னாண்டோ 18 ஓட்டங்களுடன் வீழவே, தினேஷ் சந்திமால் சிறப்பான இணைப்பாட்டம் வழங்கினார். இந்நிலையில் அரைச்சதம் கடந்த திரிமன்னே 55 ஓட்டங்களுடன் ரோச்சின் பந்தில் "போல்ட்" ஆனார்.

இரண்டாம் நாள் ஆட்டம் முடிவின்போது 61 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 136 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றிருந்தது.

தினேஷ் சந்திமால் 34, தனஞ்சய டி சில்வா 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் ரோச், ஜோசப், மேயர்ஸ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

(ஐ)

# டில்லி அணியின் தலைவராக ரிஷப்



புதுடில்லி, ஏப். 01

ஐ. பி. எல். தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் புதிய தலைவராக ரிஷப் பந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் தோள்பட்டை காயத்தால் தொடரிலிருந்து விலகியுள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியின்போது இவர் காயமடைந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து அவர் வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார். இந்நிலையில் புதிய தலைவரை நியமிக்க டில்லி அணி நிர்வாகம் முடிவு செய்தது. ராஜஸ்தான் அணியில் இருந்து புதிதாக இணைந்த அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் ஸ்மித், தமிழரான அஷ்வின், ரிஷப் பந்த் ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்பட வாய்ப்பு இருந்தது.

இறுதியில் ரிஷப் பந்த் அணித் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# இர்பான் பதான் தொற்றுக்கு இலக்கு



புதுடில்லி, ஏப். 01

இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் இர்பான் பதான் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொடர்பான எந்த அறிகுறியையும் வெளிப்படுத்தாத 36 வயதான இர்பான் பதான் தற்சமயம் வீட்டில் தனிமைப்படுத்தலில் உள்ளார்.

இது தொடர்பில் அவரின் ருவிட்டர் பதிவில், "நான் எந்த அறிகுறிகளும் இல்லாமல் கொவிட்-19 க்கு நேர் மறை சோதனை செய்தேன். என்னை வீட்டிலேயே தனிமைப்படுத்தியுள்ளேன். அண்மைய காலங்களில் என்னுடன் தொடர்பு கொண்டவர்கள் தயவுசெய்து தங்களை சோதித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைவரையும் மாஸ்க் அணியவும் சமூக இடைவெளியை பராமரிக்கவும் வலியுறுத்துகிறேன் என்றும் பதிவிட்டுள்ளார்.

டெண்டுல்கர், யூசுப் பதான், இர்பான் பதான் மற்றும் எஸ் பத்ரிநாத் ஆகியோர் சமீபத்தில் முடிவடைந்த வீதி பாதுகாப்பு உலகத் தொடரில் இந்தியா ஜாம்பவான் அணிக்காக பங்கேற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை முன்னாள் வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்!

கொழும்பு, ஏப். 01

சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்ட நால்வருக்கு கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து, அண்மையில் நடைபெற்ற முடிந்த வீதி பாதுகாப்பு உலகத் தொடரில் பங்கேற்ற இலங்கை ஜாம்பான் அணியில் இடம்பெற்ற அனைவரும் சுயதனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவின் ராய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் பங்கேற்ற இந்திய ஜாம்பவான் அணியின் சச்சின் டெண்டுல்கர், யூசுப் பத்தான், சுப்பிரமணியம் பத்ரிநாத், இர்பான் பத்தான் ஆகியோருக்கு கொவிட் - 19 கொரோனா தொற்று உறுதியானதை அடுத்தே, இப் போட்டித் தொடரில் பங் கேற்ற இலங்கை ஜாம்பவான் அணியினரும் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.



இதன்படி எதிர்வரும் சனிக்கிழமை வரை சுயதனிமைப்படுத்தலில் இருக்கும்படி சுகாதாரப் பிரிவு ஆலோசனை விடுத்துள்ளது. சுயதனிமைப்படுத்தலின் நிறைவில் அவர்களுக்கு மீண்டுமொரு பி.சி. ஆர். பரிசோதனை செய்யப்படும் என சுகாதாரப் பிரிவு தெரிவித் துள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பில் செனட் சபை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும்

## சிறுபான்மையினத்தவர்களுக்காக சு.க. யோசனை என்கிறார் நிமால்



கொழும்பு, ஏப்.01

**மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைத்து அந்த அதிகாரங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவது தொடர்பில் புதிய அரசலமைப்பில் விஷேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும்.**

**சோல்பரி அரசமைப்பில் சிறுபான்மையின மக்களுக்கு காப்பீடாக அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாம் சபையான செனட் சபையை உத்தேச புதிய அரசமைப்பில் மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், தொழில் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

உத்தேச அரசமைப்பு தொடர்பில் சுதந்திரக் கட்சியின் யோசனைகளை மகாநாயக்க தேரர்களுக்கு கையளித்ததன் பின்னர் கண்டியில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பல்லின சமூகம் வாழும் நாட்டில் பல பிரச்னைகள் காணப்படுவது இயல்பானதொன்றாகும். ஒரு நாடு- ஒரு சட்டம் என்ற கொள்கையை அனைத்து இன மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி பின்பற்ற வேண்டும்.

சட்டத்தின் முன் எந்தத்தரப்பினருக்கும் சலுகை வழங்கக்கூடாது. இனத்தை அடிப்படையாகக் கொண்டு அரச வரப்பிரசாதங்கள் வழங்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

பொதுச் சட்டத்தை அனைத்து இன மக்களும் மதித்து ஏற்றுக்கொள்ளும் சூழலை புதிய அரசமைப்பின் ஊடாக ஏற்படுத்த வேண்டும்.

சட்டம் சிறந்த முறையில் தெளிவானதாகக் காணப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் ஆராய நீதிமன்ற கட்டமைப்புக்குள் விஷேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும்- என்றார். (எ)



## 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இலங்கையை நேற்று வந்தடைந்தன!

கொழும்பு, ஏப்.01

6 இலட்சம் சீனாவின் சினோபார்ம் (sinopharm) கொரோனா தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்துள்ளன.

இதன்படி, பீஜிங்கிலிருந்து சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் -869 என்ற விமானத்தில் நேற்று முற்பகல் 11.28 மணியளவில் கட்டுநாயக்கா - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு இந்த தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டன.

இவற்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்றுக்கொண்டார்.

சீனாவின் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசிகள், விஷேட குளிர்சாதன வசதிகளுடன் கூடிய லொறிகளில் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டன. (எ)

## ஜெனிவா விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராம்

### ஐ.ம.ச. எம்.பி. ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஏப்.01

ஜெனிவா பிரேரணை தொடர்பான விவகாரங்களின் போது, பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுக்கத் தயாராக இருப்பதாகவும், இதனூடாக அரசியல் இலாபத்தை தேடப்போவதில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பில் எதிர்க்கட்சி தவறான பிம்பத்தை ஏற்படுத்துவதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். நாம் ஒரு போதும் அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடவில்லை. நாம் யதார்த்தத்தை புரிந்து



கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் யுத்தகால குற்றச்செயல்பாடுகளை விடவும், தற்போதை அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பிலேயே கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விடயத்தை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். காலம் காலமாக இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் இம்முறை வாக்களிக்கவில்லை. இது தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (எ)

**திவிநெகும நிதி மோசடி:**

## பஸிலுக்கு எதிரான வழக்கின் விசாரணை திகதி அறிவிப்பு

கொழும்பு, ஏப்.01

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக திவிநெகும நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பான வழக்கின் விசாரணை திகதியை கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

36.5 மில்லியன் ரூபாய் திவிநெகும நிதியைப் பயன்படுத்தி 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, பஞ்சாங்கம் மற்றும் ஜி.ஐ. குழாய் விநியோகித்தமை தொடர்பில் பஸில் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அந்தவகையில் குறித்த வழக்கு விசாரணை செப்ரெம்பர் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் என மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று அறிவித்துள்ளார்.(எ)

## புற்றுநோய் மூலக்கூறு அடங்கிய எண்ணெய் இறக்குமதிக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

### அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.01

புற்றுநோயை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இதுதொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையால் மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

## ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த ரிட் மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 01

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த ரிட் மனு மீதான தீர்ப்பை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.



தனது பாராளுமன்ற ஆசனத்தை இரத்துச் செய்வதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கக் கோரி சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த மனுவின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படவிருந்தது.

குறித்த மனு நேற்று நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயதுன்ன ஆகியோர் அடங்கிய நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்தபோது தீர்ப்பு குறித்து இன்னும் இறுதி செய்யவில்லை என அறிவிக்கப்பட்டது.

இதன்படி இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வழங்குவதாக நீதியரசர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர் மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (எ)

## ஜேர்மன், சுவிட்ஸர்லாந்திலிருந்து 24 இலங்கையர்கள் நாடு கடத்தல்

கொழும்பு, ஏப்.01

சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜேர்மனில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 24 இலங்கையர்கள், நாடு கடத்தப்பட்டு சிறப்பு விமானம் நேற்றுக் காலை கட்டுநாயக்கா - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்ஸர்லாந்திலிருந்து நான்கு பேரும் இவ்வாறு நாடு கடத்தப்பட்டனர்.

குடிவரவு சட்டங்களை மீறியதற்காக இவர்கள் 2012 மற்றும் 2013 முதல் அந்த நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர், மேலும் அந்த நாடுகளின் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் இவர்கள் இவ்வாறு நாடு கடத்தப்பட்டனர்.

இந்தக் குழுவினர் நேற்றுக் காலை 10.37 மணிக்கு ஜேர்மனின் டஸ்ஸெல்டோர்ஃப் விமான நிலையத்திலிருந்து வாமோஸ் எயர்லைன்ஸின் ஈபி -308 என்ற சிறப்பு விமானத்தினூடாக கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்..

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடிவரவுத் துறையினரால் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தனிமைப்படுத்தல் செயல்முறை முடிந்ததும், இவர்கள் சி.ஐ.டி மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படுவார்கள். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சர்வதேசத்தில் தனிமைப்படும் ஆபத்தான நிலையில் இலங்கை!

## மங்கள சமரவீர எச்சரிக்கை



கொழும்பு, ஏப்.01

**சர்வதேசத்திடம் இருந்து தனிமைப்படுத்தப்படும் மிக ஆபத்தான நிலையில் இலங்கை உள்ளது என்று எச்சரித்துள்ள முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர, கிணற்று தவளைகளாக வாழ்வதில் எந்தப் பயனும் கிடையாது. இதனை மையப்படுத்தியே தற்போது அரசாங்கத்தின் போக்கு காணப்படுவதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.**

பத்தரமுல்லை - கோட்டை சோலிஸ் ஹோட்டலில் நேற்று புதன்கிழமை அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இலங்கையின் உள்நாட்டுப் போர் 2009 இல் நிறைவடைந்த பின்னர் பல உலக நாடுகள் வாழ்த்துக்களை தெரிவித்தன. மறுபுறம் மீறல்களை மையப்படுத்தி விசாரணைகளுக்கும் வலியுறுத்தின. குறிப்பாக வெள்ளை கொடி விவகாரம் போன்ற சம்பவங்களை மையப்படுத்தி விசாரணைகளை சர்வதேசம் வலியுறுத்தியது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளிலும் இவ்வகையான உள்ளக விசாரணைகள் குறித்து வலியுறுத்தப்பட்டிருந்தது. 2014ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐ. நா. சபையில் இலங்கையின் எதிர்ப்பையும் மீறி சர்வதேச விசாரணை பொறிமுறையொன்றை இலங்கைக்கு எதிராக முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

அதிஷ்டவசமாக 2015 இல் ஆட்சி மாற்றம் இடம்பெற்று இலங்கைக்கு எதிரான சர்வதேச நடவடிக்கையை தடுக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. நல்லாட்சி அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்றவுடன் டில்லிக்குச் சென்று அப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜை சந்தித்து நிலைமைகளை தெளிவுபடுத்தினேன்.

அடுத்ததாக ஜெனிவா சென்று அப்போதைய ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளராக செயல்பட்ட ஷெயிட் ராட் அல் ஹூசைனை சந்தித்து ஆட்சி மாற்றம் குறித்தும் ஆரோக்கியமானதும் நம்பகமானதுமான இலங்கையின் முன்னெடுப்பு திட்டங்கள் குறித்தும் தெளிவுபடுத்தினேன். இதன் போது குறிப்பாக இலங்கை குறித்து சர்வதேச விசாரணை பொறிமுறைக்கான தீர்மானத்தை இம்முறை சமர்ப்பிக்க வேண்டாம் என்றும் கால அவகாசம் தருமாறும் கோரினேன். இதனை ஏற்றுக்கொண்டு எமக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

தடைபட்டுப் போயிருந்த ஜி. எஸ். பி. வரிச்சலுகை என்பன கிடைக்கப் பெற்றன. ஆகவே கிணற்று தவளைகள் போல் வாழ்ந்து விட முடியாது என்பதை நாம் அறிய வேண்டும். உள்நாட்டு மக்களை ஏமாற்றுவதைப் போன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்றிவிட முடியாது. பொருளாதாரம், சர்வதேசம் உள்ளிட்ட பல வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கை தற்போதுள்ளது. சர்வதேச மட்டத்தில் தனிமைப் படுத்தப் படும் ஆபத்தான நிலையில் இலங்கை உள்ளது. இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## பரீட்சைகள் திணைக்கள ஊழியர்கள் எதிர்ப்புசெயல்!

கொழும்பு, ஏப். 01

பரீட்சைகள் திணைக்களத்தின் ஊழியர்கள் சிலர் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாளாந்தம் வழங்கப்படும் மேலதிக நேர கொடுப்பனவு தாமதமானமைக்காகவே அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் குறித்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜிதவிடம் வினவிய போது, ஊழியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவிற்கு தேவையான நிதியை திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

திறைச்சேரியால் நிதி ஒதுக்கப்பட்டதும், அதனை விரைவாக ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஐ)

## 296 சிறுநீரக நோயாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகிறது

கிளிநொச்சி, ஏப். 01

கிளிநொச்சி மாவட்டத்தில், 333 பேர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 296 பேருக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக, மாவட்டச் சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வேலை திட்டங்களின் அடிப்படையில், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 192 பேரும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில், 56 பேரும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில், 42 பேரும் பளை பிரதேச செயலாளர் பிரிவில், 23 பேரும் என 333 பேர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சுகாதார விதிகளை மீறி திருமணம் கரவெட்டியில் மண்டபத்துக்கு "சீல்"!

வடமராட்சி, ஏப். 01

சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறாது திருமண நிகழ்வை ஒழுங்கு செய்த மண்டபம் ஒன்று நேற்று மூடப்பட்டது.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள திருமண மண்டபமே இவ்வாறு சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டது.

நேற்றைய தினம் இந்த மண்டபத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் 400இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் அறிந்த கரவெட்டி வைத்திய அதிகாரி பிரிவினர் குறித்த திருமண மண்டபத்திற்கு சென்று, அங்கிருந்தவர்களை வெளியேற்றினர். எனினும், மணமக்கள் அவர்களின் நெருக்கமான உறவினர்கள், படப்பிடிப்பாளர்களுடன் திருமணத்தை நடத்த அனுமதித்த பின்னர் மண்டபத்துக்கு சீல் வைத்தனர். (ஐ - 2)

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## 6 ஆயிரம் வாள்கள் இறக்குமதி: பொலிஸ் குழுக்கள் விசாரணை!

கொழும்பு, ஏப். 01

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சமயத்தில் வெளிநாடுகளில் இருந்து ஆறாயிரம் வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. இந்தத் தகவலை சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் சமயத்தில் இறக்குமதி செய்யப்பட்டன என்று கூறப்படும் ஆறாயிரம் வாள்களுக்கும் என்ன நடந்தது என்று விசாரணை நடத்த வேண்டும் என்று கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயதுன்னே கொரயா ஆகியோரை உள்ளடக்கிய நீதியரசர்கள் குழாமால் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி அவந்தி பெரேரா, "வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் தலைமையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் இரு குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன", என்று நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இதனால், குறித்த மனுவைத் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அவசியம் இருக்காது எனவும், இந்த விடயம் குறித்து மனுதாரரிடம் கேட்டறிந்து எதிர்வரும் மே மதம் 6ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிப்பதாகவும் அவர் மன்றில் கூறினார். (ஐ)

## பதுக்கி வைக்கப்பட்ட கஞ்சா மன்னாரில் கைப்பற்றப்பட்டது

மன்னார், ஏப். 01

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள பேசாலை 4ஆம் வட்டாரம் கடற்கரை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை பேசாலை பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் 46 கிலோ கிராம் எடை கொண்டது என்றும், இவற்றின் பெறுமதி சுமார் 46 இலட்சம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - நானும் சிங்கிள்தான்
திரைவிமர்சனம்



**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - இசை நிகழ்ச்சி



10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில்
கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி
வினாத்தாள்

**ஓம் நிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் ஏழாலை வசந்த
நாகபூஷனி அம்மன் ஆலய திருவிழா
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் அளவெட்டி
அழகொல்லை விநாயகர் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி யாழ்ப்பாணம் ஏழாலை வசந்த
நாகபூஷனி அம்மன் ஆலய திருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org